Registered as a Newspaper

பக்கங்கள் 16+8

விலை ரூ. 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 112

ஞாயிற்றுக்கிழமை
17 மார்ச் 2024

முச்சந்தி முரளி



"அப்ப இனிமேல் தமிழர் சாப்பிட வாய் திறந்தாலும் நல்லிணக்கத்துக்கு குந்தகம் எண்டு சொன்னாலும் சொல்லுவினம்"

## 107 தமிழில் முறையிட அவசர இலக்கம்!

பொலிஸாரால் அறிமுகம்

யாழ்ப்பாணம், மார்ச் 17
தமிழ்மொழி மூல முறைப்பாட்டுக்கான அவசர தொலைபேசி இலக்கம் '107' இன் அறிமுக நிகழ்வு

02

பட்டிமன்றப் பேச்சின் ஊடாக

# தமிழ் இளைஞர்களை உசுப்பேற்றி நல்லிணக்கத்தைக் குழப்ப முயற்சியாம்!

புலனாய்வுப் பிரிவு அறிக்கை

கோப்பாய் ஆசிரியர் கல்லூரி அதிபர் லலீசனுக்கு எதிராக விசாரணை

கருத்துச் சுதந்திரத்தை நசுக்க முயற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 17

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் அதிபர் ச.லலீசன் இலங்கையில் இன நல்லிணக்கத்துக்கு எதிராக இளைஞர்களைத் தூண்டுகிறாரா என்ற கோணத்தில் சீருடையினர் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைவாக கல்வி அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

02

## கைதானோரை விடுவிக்குமாறு கோரி ரணிலிடமே சரணடையத் தீர்மானம்

போராட்டத்தில் பங்கேற்காது கூட்டம் நடத்திய தமிழ்த் தலைவர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 17
வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்டவர்களின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு சில தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.
யாழ்ப்பாணத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்

02

வெடுக்குநாறியில் கைதானோரின்

## உணவு தவிர்ப்பு நிறைவுக்கு வந்தது

வவுனியா, மார்ச் 17
வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட 5 பேரும் வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் முன்னெடுத்த உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்றுடன் முடித்து வைக்கப்பட்டது.

02

## நீராடச் சென்ற சிறுமி கடலில் மூழ்கி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17
சாட்டிக் கடலுக்குள் நண்பியுடன் நீராடச் சென்ற சிறுமியொருவர் நீரில் மூழ்கி உயிரி

02

## தலைக்கவசம் அணியாத இளைஞன் விபத்தில் சாவு

விரிவு - பக். - 02



இந்துக்களின் போர்

## யாழ். இந்துவுக்கு இன்னிங்ஸ் வெற்றி!

யாழ்ப்பாணம், மார்ச் 17
13ஆவது இந்துக்களின் போர் துடுப்பாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி இன்னிங்ஸ் மற்றும் 100 ஓட்டங்களால் அபார வெற்றியைப் பெற்றுக்கொண்டது.

02

# சஞ்சீவி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

மக்கள் எழுச்சியுடன்

# வவுனியாவில் நேற்றும் மிகப் பெரும் பேரணி

வவுனியா, மார்ச் 17

வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆல யத்தில் கைது செய்யப்பட்ட பூசகர் உள்ளிட்ட 8 பேரையும் விடுவிக்கக்கோரியும், பொலிஸாரின் அராஜகத்தைக் கண்டித்தும் வவுனியாவில் கவனவீர்ப்புப் பேரணி நேற்றும் முன்னெடுக்கப்பட்டது. ஆலய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் நெடுங்கேணியில் நேற்றுமுன்தினம் கவனவீர்ப்புப் பேரணி இடம்பெற்றிருந்த நிலையில், கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர்களின் வேண்டுகோளுக்கு அமைவாக வவுனியா நகரில் நேற்றுப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

வெடுக்குநாறிமலையில் கைது செய்யப்பட்டவர்களின் விடுதலையை வலியுறுத்தி யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து வாகனப் பேரணி நேற்று ஆரம்பமானது. இந்த வாகனப் பேரணி வவுனியா பழைய பேருந்து நிலையத்தை வந்தடைந்ததைத் தொடர்ந்து கவனவீர்ப்புப் பேரணி ஆரம்பமானது.

வவுனியா, பழைய பேருந்து நிலையத்தில் ஆரம்பித்து அங்கிருந்து மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியை அடைந்து, பசார் வீதியூடாக சென்று ஹொரவப்பொத்தானை வீதியை அடைந்து அங்கு மருத்துவமனைச் சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள தொல்பொருள் திணைக்களத்தை முற்றுகையிட்டு கோஷம் எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரர்கள், பின்னர் கண்டி வீதி ஊடாகச் சென்று வவுனியா சிறைச்சாலை முன்றிலில் தமது போராட்டத்தை முடித்துக்கொண்டனர்.

ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டவர்கள் 'பொலிஸ் அராஜகம் ஒழிக, வெடுக்குநாறி எங்கள் சொத்து, கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய், வழிபாட்டு உரிமையைத் தடுக்காதே, சிவ வழிபாட்டைத் தடை செய்யாதே, வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம், இராணுவமே வெளியேறு, பொய் வழக்குப் போடாதே, பௌத்தமயமாக்கலை உடனே நிறுத்து' என எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்ததுடன் கோஷங்களையும் எழுப்பினர். (அ-ஒ-18-110)

## தமிழ்...

'தமிழ் வேள்வி 2023' என்ற நிகழ்வில் 'ஈழத் தமிழ்ச் சமுதாயத்தில் தற்பொழுது இளைஞர் அமைப்புகளின் எழுச்சி அவசியமானதா? அவசியமற்றதா?' என்ற தலைப்பில் இடம்பெற்ற பட்டிமன்றத்தில் நடுவராகக் கலந்துகொண்ட கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ச.லலீசன், இளைஞர்களிடையே இன நல்லிணக்கத்தைக் குழப்பும் வகையில் தமிழ் இளைஞர்களை எழுச்சி கொள்ளத் தூண்டும் வகையில் கருத்துகளைத் தெரிவித்திருந்தார் என்று கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் கல்வி அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அறியவருகிறது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தனக்கு விளக்கமான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறும் கல்வி அமைச்சின் ஒழுக்காற்றுப் பிரிவுக்கான மேலதிக செயலர் சீ.சமந்தி வீரசிங்கவால் கல்வி அமைச்சின் ஆசிரியர் பயிற்சிக் கல்விப் பிரிவின் பணிப்பாளரிடம் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு பட்டிமன்றக் கருத்தைக்கூட முறைப்பாடாகக் கருதி, அது நல்லிணக்கத்துக்குக் கேடு என்றரீதியில் இடம்பெறும் இந்த விசாரணை நடவடிக்கைகள் கருத்துச் சுதந்திரத்தின் மீதான மிக மோசமான செயற்பாடு என அவதானிகள் விமர்சித்துள்ளனர்.

இதேவேளை - நல்லிணக்கத்துக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையில் சிங்களக் கல்வியியலாளர்கள், அரசியல்வாதிகள், பிக்குகள் தொடர்ச்சியாக கருத்துகளை வெளியிட்டபோதும் அது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

## யாழ். இந்துவுக்கு...

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் - கொழும்பு இந்து கல்லூரிக்கும் இடையிலான மாபெரும் துடுப்பாட்டப் போட்டி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொழும்பு இந்துக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அந்த அணி முதலாவது இன்னிங்ஸில் அனைத்து இலக்குகளையும் இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் அந்த அணி சார்பில் அபிஷேக் 14 ஓட்டங்களையும், நிதுஷன் 12 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டனர். பந்துவீச்சில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சார்பில் சுபர்னன் மற்றும் ஹரிஹரன் ஆகியோர் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முதல் நாள் ஆட்ட நிறைவில் 4 இலக்குகளை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தின் ஆரம்பத்திலிருந்து அடித்தாடி ஓட்டங்களைக் குவித்த யாழ். இந்து அணி 56 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 240 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. அந்த அணி சார்பில் பரிசித் 46 ஓட்டங்களையும் பிரேமிகன் 43 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில் கொழும்பு இந்துக்கல்லூரி சார்பில் நிதுஷன், அபிஷேக் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் தனது இரண்டாம் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு இந்துக் கல்லூரி 32 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 60 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது. அந்த அணி சார்பில் டிலோஜன் அதிகபட்சமாக 28 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சார்பில் சுபர்னன் மற்றும் தரனிசன் ஆகியோர் தலா நான்கு இலக்குகளைக் கைப்பற்றினர். (அ-ஒ-20)

## தமிழில்...

வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபர் சாமந்து விஜயசேகர தலைமையில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலய வாளாகத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் வியானி குணதிலக, பொதுமக்கள், வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட செயலர் க.கனகேஸ்வரன், வவுனியா மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமார், வடமாகாண மூத்த பொலிஸ்மா அதிபர் மஹிந்த குணரட்ண உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள், விசேட அதிரடிப்படை அதிகாரிகள், வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், மதத்தலைவர்கள், கிராம அலுவர்கள், சமுதாய பொலிஸ் குழு உறுப்பினர்கள், வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இதன் பின்னர் யாழ்ப்பாணத்தில், வர்த்தக சமூகத்தினரும் பொலிஸ்மா அதிபர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் சந்திப்புகளை நடத்தினர். இதன்போது வர்த்தகர்களால், சுற்றுலா விசாவில் வந்து வியாபாரம் செய்பவர்கள் தொடர்பில் முறையிடப்பட்டது. இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரும், பொலிஸ்மா அதிபரும் உறுதியளித்தனர்.

"வடக்கு மற்றும் தெற்குக்கு ஒரே சட்டம் தான். அங்கு மக்களின் குரல்களைக் கேட்பதைப்போல வடக்கிலும் மக்களின் குரலை நாம் செவிமடுப்போம். வடக்கிலும் வாள்வெட்டுக் குழுக்கள், போதைப் பொருள் என்பவற்றை முழுமையாக ஒழிப்போம்" என்று பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டார். (அ-ஒ-ப-18-26)

## நீராடச்...

ழுந்துள்ளார். நாவாந்துறையைச் சேர்ந்த அல்லைப்பிட்டியில் வசித்து வரும் அவந்திகா விஜயகாந்த் (வயது-10) என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார்.

அவர் தனது நண்பியுடன் சாட்டிக் கடலில் நேற்று மாலை குளித்துக்கொண்டிருக்கும்போது அலையில் சிக்குண்டுள்ளார். நண்பி அங்கிருந்து தப்பி வந்து அபயக் குரல் எழுப்பிய நிலையில் அங்கு நின்றவர்களால் அலையில் அடித்துச் செல்லப்பட்ட சிறுமியை மீட்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. நேற்று மாலை சிறுமி சடலமாகவே மீட்கப்பட்டார். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ஒ-26)

## கைதானோரை...

சி.வி.விக்னேஸ்வரன் இல்லத்தில் அவரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட 8 பேரினதும் வழக்கு நீதிமன்றத்தில் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிலையில் அதற்கு முதல்நாள் அதாவது நாளை திங்கட்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இந்த அரசியல் தலைவர்கள் சந்திக்கவுள்ளனர்.

நேற்றைய சந்திப்பில், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறீகாந்தா, ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சி.வேந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இந்தச் சந்திப்பில் பங்கேற்கவில்லை.

இதேவேளை - கைதானோரை விடுவிக்கக்கோரி வவுனியாவில் மிகப் பெரிய கவனவீர்ப்புப் போராட்டமொன்று நேற்று இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-26)

## உணவு...

வவுனியாவில் முன்னெடுக்கப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டம் வவுனியா சிறைச்சாலை முன்றிலில் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, வேலன் சுவாமி, அருட்தந்தை ரமேஸ், சட்டத்தரணி க.சுகாஷ், நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஆகியோர் கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்களுடன் கலந்துரையாடி அவர்களின் இணக்கத்துடன் சிறைச்சாலைக்குச் சென்று உணவு தவிர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆலயப்பூசகர் மதிமுகராசா, எஸ்.தவபாலசிங்கம், சிந்துஜன், தமிழ்ச்செல்வன், விநாயகமூர்த்தி ஆகிய 5 பேருடனும் கலந்துரையாடி அவர்களுக்கு நீராகாரம் கொடுத்து போராட்டத்தை நிறைவு செய்து வைத்தனர்.

அவர்களின் விடுதலைக்காக தாம் வெளி யில் ஒன்றுபட்டு தொடர் போராட்டங்களை முன்னெடுப்பதாக உணவு தவிர்ப்பு போராட்டத்தை முடித்து வைத்தவர்கள் உறுதிமொழி வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-18-110)

## தலைக்கவசம்...

தலைக்கவசம் அணியாத இளைஞன் விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

பளையைச் சேர்ந்த சாந்தலிங்கம் நிரோசன் (வயது-21) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 11ஆம் திகதி இரவு வேலைக்குச் சென்றுவிட்டு வீட்டுக்கு வரும்போது அவர் மோட்டார் சைக்கிளுடன் வீழ்ந்துள்ளார். இதன்போது அவர் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை. காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ஒ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனவர்களின் பிரச்சினைக்கு

# தமிழ்த் தலைமைகள் இணைந்தால் தீர்வாம்



மீன்பிடி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 17**

**வடக்கிலுள்ள அரசியல் தலைவர்கள் அரசாங்கத்துடன் இணைந்து இந்தியாவுடனான பேச்சுகளில் கலந்துகொண்டால் கச்சதீவு உட்பட மீனவர் பிரச்சினைக்கு குறுகிய காலத்துக்குள் தீர்வு காணமுடியும் என்று மீன்பிடித்துறை இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா மேலும் தெரிவித்ததாவது:-

கச்சதீவை மீண்டும் இந்தியாவுக்கு வழங்கவேண்டும் என்று தமிழகத்தில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அதன் உரிமையைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவே இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் குறித்த பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படாமலுள்ளன.

உண்மையில் இது எமது கடல் வளத்தைக் கொள்ளையடிக்கும் செயற்பாடாகும். சிலர் தமது அரசியலுக்காக இந்தப் பிரச்சினையைப் பயன்படுத்த முயற்சிக்கின்றனர். இந்தப் பிரச்சினைக்கு இராஜதந்திர மட்டத்தில் தீர்வு காணவேண்டும். அரசியல்பேதங்களைத் துறந்து வடக்கு அரசியல் தலைவர்கள் அரசாங்கத்துடன் இணைந்து இந்தியாவுடனான பேச்சுகளில் பங்குபற்றி தமது ஒத்துழைப்புகளை வழங்கினால் இந்தப் பிரச்சினைக்கு குறுகிய காலத்துக்குள் தீர்வுகாண முடியும் - என்றார். (ச-இ)

# இனவாதிகள் மதவாதிகளுக்கு கூட்டணிக்குள் இடமேயில்லை

ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 17

இனவாதிகள் மற்றும் மதவாதிகளுக்கு ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இடமில்லை என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'இந்த நாட்டில் பரந்துபட்ட அரசியல் கூட்டணியை உருவாக்குவோம். அனைத்துக் கட்சிகளில் இருந்தும் ஐக்கிய மக்கள் சக்தியில் பலர் இணைந்து வருகின்றனர். சிவில் அமைப்புகளும் இணைந்துள்ளன. மேலும் பல தரப்பினரும் பேச்சு நடத்திவருகின்றனர். ஊழல்வாதிகள், மோசடிக்காரர்கள், இனவாதிகள் மற்றும் மதவாதிகளுக்கு கூட்டணியில் இடமில்லை. இந்த நாட்டில் உருவான பெரும் கூட்டணியாக எமது கூட்டணி அமையும்' - என்றார். (ம-44)

# நீர்த்தேக்கங்களில் குறையும் நீர்மட்டம்

கொழும்பு, மார்ச் 17

மகாவலி உட்பட 73 நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 90 சதவீதமாகக் குறைந்துள்ளது என்று நீரியல் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் தெரிவித்துள்ளது.

வெப்பமான வானிலை காரணமாக வீடுகள் மற்றும் அரசநிறுவனங்களில் தண்ணீரை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டும் என காலநிலை அவதான நிலையம் அறிவுறுத்தியுள்ளது. (ச-இ)

# பொலிஸார் இடமாற்றம்

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் உட்பட 18 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இடமாற்றங்கள் தேசியப் பொலிஸ் ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கமைய பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் பணிப்புரையின் கீழ் வழங்கப்பட்டுள்ளன. (ச-இ)


## மரண அறிவித்தல்



**தெய்வேந்திரம் மகேந்திரராணி (கலா)**

**(பெண் பரிசாரகர் - சங்கானை, பண்டத்தரிப்பு, காரைநகர் பிரதேச வைத்தியசாலை)**

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் தேவாலய வீதி சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வேந்திரம் மகேந்திரராணி (கலா) நேற்று (16.03.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் தெய்வேந்திரம் (ராசன்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணர் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், அனந்தகோபன் (அனந்தன்), ஆதித்தியன் (ஆதி), ஆதவன் (மாணவன், யா/ சங்கானை சிவப்பிரகாச ம.வி), அரிராம் (மாணவன் - யா/ இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாலச்சந்திரன் (சந்திரன்), ராஜினி (பிள்ளையம்மா), பூலோகம் (பெற்றி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தேவாலய வீதி,
சங்கானை.

(cr/41930) j-1

தகவல்,
குடும்பத்தினர்.


# சிரமதான நிகழ்வு

யாழ்.,மார்ச் 17

'கடல் மற்றும் கடல்சார் வளங்களைப் பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளில் இலங்கை வடபிராந்திய ஸ்ரீ சத்தியசாயி நிறுவன இளைஞர்கள் முன்னெடுக்கும் கடற்கரையோரச் சிரமதான நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி முதல் காலை 9 மணி வரை யாழ். பண்ணைக் கடற்கரையிலும், காலை 8 மணி முதல் மு.ப. 10.30 மணி வரை வடமராட்சி அக்கரை கடற்கரையிலும் இடம்பெறவுள்ளது. இந்த இரு சிரமதான நிகழ்வுகளிலும் அனைவரையும் தவறாது கலந்துகொண்டு பங்களிப்பு வழங்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ப-66)

# பொறியியலாளர்கள் வெளியேற்றம்

நெருக்கடியில் மின்துறை

கொழும்பு, மார்ச் 17

இலங்கை மின்சாரசபையில் பணிபுரியும் பொறியியலாளர்களின் வெளியேற்றத்தால் மின்சார சபை கடும் நெருக்கடிக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பில் இலங்கை மின்சாரசபையின் பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் தனுஷ்க பராக்கிரமசிங்க தெரிவிக்கையில், 159 பொறியியலாளர்கள் இரண்டு வருடங்களுக்குள் வெளிநாடு சென்றுள்ளனர். 105 பொறியியலாளர்கள் தமது சேவையை விட்டு விலகியுள்ளனர். 54 பேர் உத்தியோகபூர்வ விடுமுறை பெற்றுச் சென்றுள்ளனர். அனுபவம் வாய்ந்த பொறியியலாளர்கள் தமது பணியை மேலும் துறந்தால் இலங்கை மின்சாரசபை கடும் நெருக்கடிக்கு உள்ளாகும் நிலை ஏற்படும் என்றும் தெரிவித்தார். (ச-இ)

# 'குற்றம் சுமந்த குருதி'

## திருப்பாடுகளின் காட்சி இன்று!

யாழ்ப்பாணம், மார்ச் 17

நாரந்தனை பங்கு பெருமையுடன் தயாரித்து வழங்கும் 'குற்றம் சுமந்த குருதி' திருப்பாடுகளின் காட்சி இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

புனித பேதுரு பவுல் ஆலய முன்றிலில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு நாரந்தனைப் பங்குத்தந்தை மற்றும் பங்கு மக்கள் அழைத்துள்ளனர். (ஓ-100)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இயற்றாலை அ.மி.த.க. பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு மற்றும் மைதான பொதுமண்டபத் திறப்பு விழா என்பன அண்மையில் நடைபெற்றன. அதிபர் திருமதி தவசொரூபி ஸ்ரீமோகன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சி.உதயகுமார் கலந்துகொண்டார். (ப-159)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் மேற்பிரிவு மாணவர்களுக்கான வருடாந்த மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. கல்லூரி அதிபர் ம.மணிசேகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழையமாணவனும், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளருமான சி.சிவபாலா கலந்துகொண்டார். (ப-27)





பேசாலை சென்.பற்றிமா மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி பாடசாலை அதிபர் எஸ்.கே.பிகிராடோ தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் மாவட்ட செயலர் கே.கனகேஸ்வரன், பேசாலை பங்குத் தந்தை அருட்பணி எஸ்.அன்ரன் அடிகளார், மன்னார் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.ஞானராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ப-60)



யாழ். மாவட்ட கோப்பாய்ப் பிரதேசசெயலாளரின் வழிகாட்டலில் சுதேச மருத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தரின் ஒழுங்கமைப்பில் வலிகாமம் கிழக்குப் பிரிவு, அரச மூலிகைத் தோட்டம் மற்றும் சித்த மத்திய மருந்தகத்தின் அனுசரணையுடன் ஆயுள் வேத பாதுகாப்புச்சபை இணைந்து முன்னெடுக்கும் இலவச பொதுமருத்துவ முகாம் வாதரவத்தை கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. (ப-13)

பெத்தாத்தம்மா அறக்கட்டளையின் ஏற்பாட்டில் ஆனைக்கோட்டைப் பகுதியில் வசித்துவரும் பொருண்மியம் நலிவுற்ற ஒரு குடும்பத்துக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக இரண்டு ஆடுகள் மற்றும் குட்டிகள் என்பன அண்மையில் வழங்கப்பட்டன. (ப)





செட்டிகுளத்திலுள்ள பெண் தலைமைத்துவக் குடும்பத்தின் வாழ்வாதாரம் மற்றும் குடி தண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வாக குடிதண்ணீர்த் திட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. லண்டனில் வசிக்கும் அற்புதராஜன் விஜயகுமாரியின் நிதி உதவியில் ஊடக உறவுகளின் பாலம் அமைப்பின் ஊடாக வழங்கி வைக்கப்பட்டது. (ஒ-18)



பூநகரிப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் மின் குமிழ்களை புதிதாகப் பொருத்தும் நடவடிக்கையில் பூநகரிப் பிரதேச சபையினர் ஈடுபட்டுள்ளனர். (ப-13)



நாவலர், சோலை முன்பள்ளி மாணவர்களுடைய சிறுவர் சந்தை நிகழ்வு, நீராவியடி சைவபரிபாலனசபையின் ஏற்பாட்டில் முன்பள்ளியில் அண்மையில் இடம்பெற்றது. சைவபரிபாலனசபைத் தலைவர் உ.தயானந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், ஊர்மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப் பிடிக்கவும். திடீர் செலவுகளுக்கு வாய்ப்பு உண்டு. காரிய அனுகூலம் உண்டாகும்.

**இடபம்:** மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக் கூடும். வியாபாரத்தில் பணியாளர்களால் வீண் செலவுகள் ஏற்படும். சிரமங்கள் குறையும். இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். வழிபாடு நலம் சேர்க்கும்.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாள். தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலமாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். ஆதாயம் கிடைக்கும்.

**கடகம்:** உறவினர்களால் பிரச்சினை ஏற்படக்கூடும். ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். உறவுகளால் செலவுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும். நலம் தரும். நற்பலன்கள் அதிகரிக்கும். மகிழ்ச்சி தரும். ஆதாயம் பெறும் வாய்ப்பு உண்டு

**கன்னி:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முக்கியமான முடிவுகளை எடுக்கலாம். சகோதர வகையில் செலவுகள் ஏற்படும். முயற்சிகள் வெற்றிகரமாக முடியும்.

**துலாம்:** மனதில் குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உற்சாகமாக இருப்பீர்கள். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் மந்தமாக இருக்கும். நன்மைகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம் :** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். காரியம் அனுகூலமாக முடியும். விநாயகரை வழிபட வெற்றிகள் வசமாகும். திடீர் செலவுகளும் ஏற்படும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளால் பெருமை ஏற்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மகரம்:** தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். கவனமாகச் செல்லவும். முயற்சிகளுக்கு ஆதரவாக இருப்பீர்கள். பணியாளர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். இலாபம் அதிகரிக்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் சுமாராகத்தான் இருக்கும். விநாயகர் வழிபாடு நலம்

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். மனதுக்கு உற்சாகம் கிடைக்கும். வீண்மனஸ்தாபம் ஏற்படும். புதிய முயற்சியைத் தவிர்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத்தேர்தலின் பின் ஜனாதிபதித் தேர்தல்!

## ரணிலிடம் பெரமுன கோரிக்கை

**கொழும்பு, மார்ச் 17**

**ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்துமாறுகோரும் யோசனையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிப்பதற்கு பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.**

பொதுஜனபெரமுனவின்நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் இதுபற்றி ஆராயப்பட்டு, தீர்க்கமானதொரு முடிவு எடுக்கப்படவுள்ளது. இந்தக் கூட்டத்தின் பின்னர் பெரமுனவின் உயர்மட்டம் ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளது. இந்தச் சந்திப்பின்போதே மேற்படி யோசனை கையளிக்கப்படவுள்ளது.

பொதுஜன பெரமுன கட்சிக்குள் ஒரு தரப்பினர் முதலில் ஜனாதிபதித் தேர்தலைக் கோரினாலும் பஸில் ராஜபக்ச உள்ளிட்ட பெரும்பான்மையான உறுப்பினர்கள் பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளனர்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ஜனாதிபதியிடம் மேற்படி யோசனை கையளிக்கப்படவுள்ளது. (ம-44)



# தயாசிறியின் தலைமையில் புதிய கூட்டணி உதயமாம்

கொழும்பு, மார்ச் 17

சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தலைமையில் புதியதோர் அரசியல் கூட்டணி உதயமாகவுள்ளது.

18 கட்சிகள், சிவில் அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்கள் இணைந்துள்ள இந்தக் கூட்டணிக்கு மனிதநேய மக்கள் கூட்டணி எனப் பெயரிடப்பட்டுள்ளது எனவும், எதிர்வரும் 20ஆம் திகதி அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெறும் எனவும் ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.


கொழும்பு, லக்ஷ்மன் கதிர்காமர் மத்திய நிலையத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு இதற்கான நிகழ்வு நடைபெறவுள்ளது.

அடுத்த தேர்தலை இலக்குவைத்தே இந்தக்கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது. 'எனக்கு ஜனாதிபதி என்ற பதவி ஆசை இல்லை. எனினும், கூட்டணியில் உள்ளவர்கள் கோரிக்கை விடுத்தால் சவாலை ஏற்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயார்' - என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். (ம-44)

## மகளிர்தினம்

யாழ். முன்பள்ளி ஆசிரிய தொழிற்சங்கத்தின் சர்வதேச மகளிர்தின நிகழ்வு பருத்தித்துறைவீதியிலுள்ளதிவ்யஜீவன சங்க மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமைகாலை9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமாகாண மற்றும் யாழ். மாவட்ட முன்பள்ளி ஆசிரிய சங்கத் தலைவர் திருமதி யோ.கேமநளினி தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியற்றுறை பேராசிரியர் ஜெ. இராசநாயகம், சிறப்பு விருந்தினர்களாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி த.உமா, யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி ஓய்வுநிலைப் பீடாதிபதி கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம், வடமாகாண ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் ஜெயா தம்பையா, யாழ். மாநகரசபை முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, மாகாணசபைமுன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், கலாநிதி ஆறு திருமுருகன் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ப)



## மீனவர் மாயம் தேடும்பணி துரிதம்

கிளிநொச்சி, மார்ச் 17

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் மீனவர் ஒருவர் கடலில் தொழிலுக்காகச் சென்ற நிலையில் காணாமற்போயுள்ளார்.

நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை கடலில் தொழிலுக்குச் சென்ற நிலையில் அவர் பயணித்த தெப்பம் மட்டும் கரையொதுங்கியுள்ளது.

மருதங்கேணி வடக்கைச் சேர்ந்த 60 வயதுடைய முத்துச்சாமி தவராசா என்பவரே இவ்வாறு காணாமற்போயுள்ள நிலையில் அவரைத் தேடும் பணிகள் துரிதகதியில் மேற்கொள்ளப்படுகின்றன. (ச-27,100)



## அநுரவின் வருகையை எதிர்த்துப் போராட்டம்!

கிளிநொச்சி, மார்ச் 17

அநுரகுமார திஸாநாயக்க, நேற்றுக் கிளிநொச்சிக்குச் சென்று மக்கள் சந்திப்புகளில் ஈடுபட்ட நிலையில், அவரின் கிளிநொச்சி வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

முன்னாள் கரைச்சிப் பிரதேசசபை உறுப்பினர் சண்முகம் ஜீவராஜ் இவ்வாறு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டார். மக்கள் சந்திப்பு இடம்பெற்ற பகுதியை அண்மித்து ஏ-9 வீதியில் அமர்ந்திருந்து அவர் போராட்டத்தில் ஈடுபட்டார். (ம-113-27)

## பேருந்துச்சேவை நடத்துமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 17

பளைப் பிரதேசத்திலுள்ள பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களின் நலன்கருதி எழுதுமட்டுவாழ் தொடக்கம் ஆனையிறவு வரையான ஏ-9 மார்க்கத்தில் பாடசாலை பேருந்துச்சேவைகளை நடத்துமாறு பச்சிலைப்பள்ளி பிரதேச மாணவர்கள் மற்றும் பெற்றோர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-9)

## தமிழக மீனவர்கள் 15 பேருக்கும் விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 17

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 15தமிழகமீனவர்களும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

காரைநகர் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது மேற்படி 15 மீனவர்களும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் பயணித்த விசைப்படகு இலங்கைக் கடற்படையின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டது.

நீரியல்வளத் திணைக்களத்திடம் மீனவர்கள் பாரப்படுத்தப்பட்டதையடுத்து அவர்களில் 14 பேர் நேற்றுமுன்தினமே ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டதையடுத்து அனைவரையும் எதிர்வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

மற்றைய ஒரு மீனவர், தன் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்தினர் எனக் குற்றஞ்சாட்டியிருந்தார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். அவரை மல்லாகம் நீதிவான் நேரில் பார்வையிட்டதுடன், அவரையும் எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ம-100)

## போதைப்பாக்கு விற்பனை பெண்ணொருவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 17




அச்சுவேலி வல்லைப் பகுதியில், சிறுவர்கள், பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து போதைப்பாக்கு விற்பனையில் ஈடுபட்ட பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த வீட்டில் போதைப்பொருள் விற்பனை மற்றும் கசிப்பு விற்பனை இடம்பெறுகின்றன என்று கிடைத்த முறைப்பாட்டுக்கமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே மேற்படி பெண் கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பும் மாவா பாக்கும் மீட்கப்பட்டதுடன், அந்தப் பெண் சட்டநடவடிக்கைக்கும் உட்படுத்தப்படவுள்ளார். (ம-27)

## நிம்மதியாகப் போகவிடுங்கள்

# வாசகங்களை தாங்கிய மிதவையால் பதற்றம்!



கொழும்பு, மார்ச் 17

'என்னை நிம்மதியாகப் போகவிடுங்கள் சகோதரர்களே' என்ற வாசகம் எழுதப்பட்ட பதாகையுடன், சோடனைகள் செய்யப்பட்ட மிதவையொன்று வடமராட்சி கிழக்குப் பகுதியில் கரையொதுங்கியுள்ளது.

ஈமைக் கிரியையின்போது கடலில் விடப்பட்டதாகக் கருதப்படும் தேர் வடிவிலான அந்த மிதவை தொடர்பில் ஊர்மக்கள் அச்சமடைந்துள்ளனர். இது தொடர்பில் துறைசார் அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## போதைக்கெதிரான பாதை எது?

நாடளாவிய ரீதியில், பாடசாலைகளுக்கு அருகிலும் மாணவர்களை இலக்காக வைத்தும் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட பலர் கடந்த சில நாள்களுக்குள் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். குறிப்பாக இலத்திரனியல் சிகரெட்கள், கஞ்சா மற்றும் மாவா போதைப்பாக்கு என்பவற்றின் விற்பனை முகவர்களாகச் செயற்பட்ட பலரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். போதைப்பொருள் வியாபாரிகளால் மாணவர்களும் - இளம் வயதினருமே அதிகம் இலக்கு வைக்கப்படுகின்றனர். வடக்கு மாகாணத்திலும் இந்த அபாய நிலைமை இருக்கின்றது. பாடசாலைகளுக்கு அருகில் கடந்த காலங்களிலும் -போதைப்பொருள் வியாபாரிகள் கைதுசெய்யப்பட்டிருந்தனர். ஆனாலும் மாணவர்களை இலக்கு வைத்துச் செயற்படும் போதைப்பொருள் வியாபாரத்தைக் கட்டுப்படுத்துவதென்பது இன்னமும் இயலாதகாரியமாகவே இருக்கின்றது. அந்த வர்த்தகமும் வலைப்பின்னலும் தொடரவே செய்கின்றன.

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்துச் செயற்படும் போதைப்பொருள் வலைப்பின்னலின் மூலவேர் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. எய்தவர்கள் தப்பிக்க அம்புகள் மட்டுமே சிக்கும் கதையின் மற்றொரு அத்தியாயமே இப்போது எழுதப்பட்டுக்கொண்டிருக்கின்றதே தவிர, இப்போது கைதுசெய்யப்படுபவர்களும் போதைப்பொருள் மாபியாக்களின் பிரதானமானவர்களோ அல்லது முக்கியமான புள்ளிகளோ இல்லை. இதுவே உண்மை.

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட ஒருவரைக் கைதுசெய்தால், அவரை நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்வதுடன் பொலிஸார் தங்கள் கடமையை முடித்துக் கொள்கின்றனர். கைது செய்யப்பட்டவருக்குப் போதைப்பொருள் எவ்வாறுகிடைத்தது என்பதுபற்றியோ, போதைப்பொருளை விநியோகிப்பவர் தொடர்பாகவோ விசாரணை நடத்தி அந்த வியாபாரச் சங்கிலியைக் கண்டறிந்து தகர்க்கவோ பொலிஸார் முயற்சிப்பதில்லை. போதைப்பொருள் வர்த்தகர்களினதும், இடைத்தரகர்களினதும் பட்டியல் மிகநீட்சியாகச் செல்வதற்கு, பொலிஸாரின்'ஆழ ஊடுருவாத' மேலோட்டமான நடவடிக்கைகளும் பிரதான காரணங்களே . இந்தச் சட்டவிரோத நடவடிக்கைகளின் மூலவேரைக் கண்டறிந்து அகற்றாத பட்சத்தில், 'யுக்திய'போன்ற எந்த விசேட நடவடிக்கையும் உரிய பயனைத் தரப் போவதில்லை என்பதே இன்று எஞ்சி நிற்கும் நிதர்சனம்.

வடக்கு மாகாணத்தில் பாடசாலைகளுக்கு அருகிலும், தனியார் கல்வி நிலையங்களுக்கு அருகிலும் போதைப்பொருள் விற்பனையும் கைமாற்றல்களும் இடம்பெறுவது ஒன்றும் பரம இரகசியம் அல்ல. அத்தகைய போதைக் குழுக்களின் நடமாட்டத்தைத் தவிர்ப்பதற்காக, வடக்கு மாகாண பொலிஸ் அதிகாரிகள் கடந்த காலங்களில் தனியார் கல்வி நிலையங்கள் உள்ள பகுதிகளில் பொலிஸ் ரோந்து உட்படப் பல திட்டங்களை நடைமுறைப் படுத்துவதாகக் கூறியபோதும், அவை எல்லாமே வெறும் வாய்ப்பந்தல்களாகவே இருந்தனவே தவிர உருப்படியானவகையில் செயற்பாட்டுக்கு வரவில்லை. இந்த வாய்மொழி அறிக்கைகளுடன் போதைக் கெதிரான நடவடிக்கைகள் முற்றுப்பெறும் வரையில், போதைப்பொருள்களை கட்டுப்படுத்துவது இயலாத காரியமாகவே இருக்கும்.




# நெல் சந்தைப்படுத்தல்சபை அரசாங்கத்தின் நாடகமே!

### கிளிநொச்சி விவசாயிகள் குற்றச்சாட்டு

**கிளிநொச்சி, மார்ச் 17**

**விவசாயிகளிடம் நெல் இல்லாத நிலையில், அரசாங்கம் நெல் சந்தைப்படுத்தல்சபையை திறந்து நாடகம் ஆடுகிறது என கிளிநொச்சி மாவட்ட கமக்காரர் அமைப்புகளின் சம்மேளனத் தலைவர் சுப்பிரமணியம் யதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி ஊடக அமையத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் நெல்லைக் கொள்வனவு செய்யாத நிலையில், விவசாயிகள் தனியாருக்குக் குறைந்த விலையில் நெல்லை விற்பனை செய்தனர். ஆனால் அரசாங்கம் தற்போது நெல் கொள்வனவு செய்வதாக, நெல் சந்தைப்படுத்தல் சபைகளின் களஞ்சியத்தைத் திறந்து தேர்தலுக்காக நாடகமாடுகின்றது. விவசாயிகளிடம் நெல் இருப்பில் இல்லாத நிலையில் எங்கிருந்து இவர்கள் நெல்லைக் கொள்வனவு செய்யப்போகின்றனர்? என்றும் கிளிநொச்சி மாவட்ட கமக்காரர் அமைப்புகளின் சம்மேளனத் தலைவர் கேள்வி எழுப்பினார். (ப-113)

## வடக்கில் வெப்பம்!

யாழ். மார்ச் 17

வடக்கு மாகாணத்தில் இன்று கடும் வெப்பமான காலநிலை நிலவும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கைவளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அத்துடன் கொழும்பு, கம்பஹா, மொனராகலை, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் இன்று அதிகரித்த வெப்பநிலை காணப்படும். மத்திய, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடியவாய்ப்புக்காணப்படுகின்றது என்றுள்ளது. (ம)

## கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பம் கோரல்

2021 மற்றும் 2022ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்களை கல்வியியற் கல்லூரிகளுக்கு உள்வாங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதுதொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் இணையவழி முறையின் ஊடாக சமர்ப்பிக்கப்படவேண்டும். விண்ணப்ப காலம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதியுடன் நிறைவடைகிறது என்றும் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## கிராம அலுவலர்கள் ஏப்ரலில் நியமிப்பு

2 ஆயிரத்து 2 கிராமஅலுவலர்களை எதிர்வரும் ஏப்ரல் மாத இறுதிக்குள் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார். நேர்முகப்பரீட்சைகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## கொல்லவிளாங்குளத்தின்கீழ் 66 ஏக். சிறுபோகச்செய்கை

முல்லைத்தீவு, மார்ச் 17

முல்லைத்தீவு கொல்லவிளாங்குளத்துக்குட்பட்ட 66 ஏக்கர் பகுதியில் இம்முறை சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கொல்லவிளாங்குளத்துக்குட்பட்ட பகுதியில் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளும் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதன்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ம-13)

### நாளை

18.03.2024

திங்கட்கிழமை

பங்குனி – 05

சுபநேரம் : 12.18 - 01.48

ராகுகாலம் : 07.48 - 09.18

### நாளொரு நல்வார்த்தை

உன்னால் செய்ய முடியாததை,
கடைப்பிடிக்க முடியாததை
மற்றவனிடம் எதிர்பார்க்காதே!

– சேகுவேரா –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளியில் அணுமையம்!



## ரஷ்ய அதிபர் புடின் உத்தரவு

**மொஸ்கோ, மார்ச் 17**

**விண்வெளியில் அணுசக்தி நிலையத்தை அமைப்பது தொடர்பில் பரிசீலனைகளை மேற்கொள்ளுமாறும், அது தொடர்பான திட்ட அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறும் ரஷ்ய அதிபர் புடின் உத்தரவிட்டுள்ளார்.**

ரஷ்யாவின் அரச செய்தி நிறுவனமான 'ராஸ்', 'விண்வெளியில் அணுசக்தி அலகை கட்டுவது உள்ளிட்ட விண்வெளித் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்' என புடின் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார் என்று செய்தி வெளியிட்டுள்ளது.

'அணுசக்திப் போருக்கு ரஷ்யா தயார்' என்ற தனது கருத்தின் மூலம் சமீபத்தில் அமெரிக்காவின் கோபத்துக்கு உள்ளான ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், தற்போது தனது அதிகாரிகளை விண்வெளியில் அணுசக்தி நிலையத்தை அமைக்குமாறு கூறியுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வணிக மற்றும் அரசாங்க செயற்கைக்கோள்களை செயலிழக்கச் செய்யும் திறன் கொண்ட அணு ஆயுதத்தை உருவாக்க மொஸ்கோ முயற்சித்து வருவதாக சி.என்.என். அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தது. இந்த நிலையிலேயே புடினின் இந்தத் திட்டம் குறித்த தகவல்களும் வெளியாகியுள்ளன. (ம)

# ரஷ்ய ஏவுகணையால் 20 பேர் உயிரிழப்பு!

**மொஸ்கோ, மார்ச் 17**

**உக்ரைனின் ஒய்டிசா நகரில் ரஷ்யா மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில் சுமார் 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.**

கடந்த இரண்டு வாரங்களில் உக்ரைனால் பெரும் அழிவுகளை ரஷ்யா சந்தித்துள்ளது. குறிப்பாக ரஷ்யாவின் எண்ணெய்த் தாங்கிகள் மற்றும் எண்ணெய்க் குதங்கள் என்பன ரஷ்யாவின் தாக்குதலுக்கு இலக்காகியிருந்தன. இதற்குப் பதிலடியாகவே உக்ரைனின் ஒய்டிசா நகரில் ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலில் உயிரிழந்த 20 பேருக்கும் மேலாக 70 பேர் காயமடைந்துள்ளனர். அவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



# நரம்பு மண்டலப் பாதிப்பு உலகளவில் அதிகரிப்பு!

**லண்டன், மார்ச் 17**

**உலக அளவில் நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும் நோய்கள் அதிகரித்து வருகின்றன என்று அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட 'சுகாதார அளவீடுகள் மற்றும் மதிப்பீட்டிற்கான நிறுவனம்' நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.**

அந்தவகையில் நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும் நோய்களான பக்கவாதம், ஒற்றைத் தலைவலி, முதுமை, மறதி ஆகியவை அதிகமானோரைப் பாதிப்பதாக ஆய்வு வெளிப்படுத்துகின்றது.

2021ஆம் ஆண்டில் உலகில் 43 விழுக்காட்டினர், அதாவது 3.4 பில்லியனுக்கும் அதிகமானோர் நரம்பியல் பிரச்சினையைச் சந்தித்திருக்கின்றனர்.

நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும் நோய்களால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை கடந்த முப்பது ஆண்டுகளில் 59 சதவீதம் அளவுக்கு அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# மைலோ உதைப்பந்தாட்ட வெற்றியாளர்கள் 2024

## வவுனியா - வட மாகாணம்

மைலோ உதைப்பந்தாட்ட வெற்றியாளர்கள் 2024 - வட மாகாணத்தின் மூன்றாவது கட்டம் (10 மற்றும் 12 வயதிற்குட்பட்டவர்களுக்கான), 2024 மார்ச் 9 அன்று வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்றது. மொத்தமாக 32 அணிகள் இப்போட்டியில் பங்குபற்றியிருந்ததுடன், அவற்றுள் பெண்கள் அணி 07 உம் ஆண்கள் அணி 25 உம் அடங்கியிருந்தன.

இவ்வார இறுதி வெற்றியாளர்களாக, வவுனியா மாவட்டத்திலிருந்து பின்வரும் பாடசாலை அணிகள் வலம்வந்தன:

- வவுனியா/ நெலுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம் (10 வயதிற்குட்பட்ட பெண்கள்)
- வவுனியா/விபுலானந்தா கல்லூரி (10 வயதிற்குட்பட்ட ஆண்கள்)
- வவுனியா/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி (12 வயதிற்குட்பட்ட பெண்கள்)
- வவுனியா/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் (12 வயதிற்குட்பட்ட ஆண்கள்)

2024 மார்ச் 23 அன்று யாழ்ப்பாணத்திலுள்ள துரையப்பா அரங்கத்தில் இடம்பெறவுள்ள, மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்ற இறுதிச் சுற்றில் போட்டியிட இவ்வார இறுதி நிகழ்விலிருந்து பின்வரும் பாடசாலைகள் தகுதி பெற்றுள்ளன.

**10 வயதிற்குட்பட்ட பெண்கள்**

- வவுனியா/நெலுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்

**10 வயதிற்குட்பட்ட ஆண்கள்**

- வவுனியா/விபுலானந்தா கல்லூரி
- வவுனியா/நெலுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்
- வவுனிய/முஸ்லிம் மகா வித்தியாலயம்
- வவுனியா/மூன்றுமுறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை

**12 வயதிற்குட்பட்ட பெண்கள்**

- வவுனியா/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி
- வவுனியா/முதலியார்குளம் ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
- வவுனியா/விநாயகர் வித்தியாலயம்
- வவுனியா/மூன்றுமுறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை

**12 வயதிற்குட்பட்ட ஆண்கள்**

- வவுனியா/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்
- வவுனியா/முதலியார்குளம் ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
- வவுனியா/அருவித்தோட்டம் சிவானந்தா வித்தியாலயம்
- வவுனியா/நெலுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்

எதிர்கால உதைப்பந்தாட்ட நட்சத்திரங்களாக மாறும் திறமைகளைக் கொண்டவர்களுக்கு களம் அமைத்து, வட மாகாணத்தில் அபிலாசைமிக்க விளையாட்டு வீரர்களின் விளையாட்டுத்திறன்களை தூண்டுவதே மைலோ உதைப்பந்தாட்ட வெற்றியாளர்கள் நிகழ்வின் நோக்கமாகும். இச்சுற்றுப் போட்டியுடன் இணைந்ததாக, திறமைமிக்க வீரர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு குழு, இலங்கை பாடசாலைகள் உதைப்பந்தாட்ட சங்கத்தின் அனுபவம்மிக்க பயிற்றுவிப்பாளர்களின் வழிகாட்டலில் எதிர்வரும் மாதங்களில் வார இறுதியில் விசேட பயிற்சிகளையும் பெற்றுக்கொள்ளவுள்ளனர். கல்வி அமைச்சு, வட மாகாண கல்வித் திணைக்களம் ஆகியவற்றின் ஆதரவுடனும், நெஸ்லே மைலோவின் அனுசரணையுடனும் இந்நிகழ்விற்கான ஏற்பாட்டை இலங்கை பாடசாலைகள் உதைப்பந்தாட்ட சங்கம் நிர்வகிக்கும்.

இலங்கையில் அடிமட்ட விளையாட்டுக்களை வளர்ப்பதிலும், விளையாட்டில் பாலின பன்மைத்துவத்தை முன்னின்று வழிநடத்திச் செல்லவும் நெஸ்லே மைலோவின் பயணத்தில், இலங்கையில் எதிர்காலத் தலைமுறைகளை வளப்படுத்தும் நோக்குடன் இந்நிகழ்வுக்கு அனுசரணையளிக்கின்றது.

# பிரிட்டன் சிறுவர்களுக்கு உளவியல் பிரச்சினை!

**லண்டன், மார்ச் 17**

**இணையத்தளங்களைப் பயன்படுத்துவதால் பிரிட்டன் சிறுவர்கள் உளவியல் பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளனர் என்று ஆய்வறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

இணையத்தளங்களில் வருகின்ற வன்முறை சார்ந்த பிரச்சினைகள் மற்றும் சுய தீங்குகளை ஊக்குவிக்கின்ற விடயங்கள் சிறுவர்களின் உளவியலில் பெரும் பின்னடைவையும் செல்வாக்கையும் ஏற்படுத்துகின்றன என்றும் அந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரிட்டனில் ஆரம்பப் பாடசாலைகளிலேயே சிறுவர்கள் இணையத்தளங்களைப் பயன்படுத்துவது அதிகரித்து வருகின்றது என்று பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அண்மைக்காலமாகத் தெரிவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# அமெரிக்க அவதானிப்பு அவசியமே இல்லாதது!

## இந்தியா பதிலடி

புதுடில்லி, மார்ச் 17

இந்தியாவில் குடியுரிமைத் திருத்தச் சட்டம் தொடர்பான அமெரிக்காவின் அவதானிப்பு தேவையற்றது என்று இந்திய வெளிவிவகாரத்துறை தெரிவித்துள்ளது.

இந்தியாவில் குடியுரிமைத் திருத்தச்சட்டம் அண்மையில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்தச் சட்டத்தின் மூலம், பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தானில் மத ரீதியாகத் துன்புறுத்தப்பட்டு கடந்த 2014ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் இந்தியாவில் தஞ்சமடைந்த இந்து, சீக்கிய, சமண, புத்த, பார்சி, கிறிஸ்தவ சமூகங்களை சேர்ந்த சிறுபான்மையினருக்கு குடியுரிமை வழங்கப்படவுள்ளது.

ஆனால், ஈழத்தமிழர்களும், முஸ்லிம்களும் இந்தியக் குடியுரிமையைப் பெறுவதற்குத் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பாரபட்சம் உலகளவில் பெரும் விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ள நிலையில், 'இந்தியாவின் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள குடியுரிமைத் திருத்தச்சட்டத்தை அமெரிக்கா உன்னிப்பாகக் கண்காணிக்கின்றது' என்று அமெரிக்க வெளிவிவகாரத் துறையின் செய்தித் தொடர்பாளர் ரந்திர் ஜெய்ஸ்வால் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# தி.மு.க.வே தமிழகத்தின் முதலாவது எதிரி!



புதுடில்லி, மார்ச் 17

தமிழகத்தை ஆளும் தி.மு.க.வே தமிழகத்தின் முதல் எதிரி என்று கன்னியாகுமரியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரியில் நேற்று நடைபெற்ற பா.ஜ.க. தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

குமரி முதல் காஷ்மீர் வரை பா.ஜ.க. அலை வீசுகிறது. தி.மு.க., காங்கிரஸ் கூட்டணியை வீழ்த்தி, மீண்டும் பா.ஜ.க. ஆட்சியமைக்கும். 'இண்டியா கூட்டணியால் தமிழகத்தில் எந்த வளர்ச்சியும் இருக்காது. ஆட்சிக்கு வந்து கொள்ளையடிப்பதுதான் அவர்களது இலக்கு. பா.ஜ.க. ஆட்சியில் நாடு முன்னேற்றமடைந்து வருகிறது. ஆனால், ஹெலிகொப்டர் ஊழல், கனிமவள ஊழல் என நீளமான ஊழல் பட்டியல்தான் இண்டியா கூட்டணியில் உள்ளவர்களிடம் இருக்கிறது. தி.மு.க. தமிழகப் பண்பாட்டின் எதிரி. எமது பாரம்பரியத்தின் எதிரி என்று பிரதமர் மோடி மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



மண்ணில் 14 . 06 . 1938 விண்ணில் 15 . 03 . 2024

**திருமதி மலர் மேரி கேட்லின் திருஞானசம்பந்தர்**

**(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மலர் மேரி கேட்லின் திருஞானசம்பந்தர் அவர்கள் நேற்று முந்தினம் (15.03.2024) வெள்ளிக்கிழமை இந்தியாவில் கோயம் புத்தூரில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருஞானசம்பந்தர் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வர்களான வர்ணகுலசிங்கி - கிறேஸ் தம்பதியரின் அன்பு மகளும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்


தர்ஷினி : +9188 3898 5778
முகுந்தன் : +9199 9415 5547
கீர்த்திகரன் : +9188 8377 7553

**தகவல்: குடும்பத்தினர்**

(CS/54403) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 10 . 1948



மறைவு 15 . 03 . 2024

**நடராஜா கிறிஸ்ரி எல்மோ ஆனந்தராஜா**

**(ஓய்வு பெற்ற வனபரிபாலகரும், U.N.D.P மனிதநேய மிதிவெடி அகற்றும் பணிப்பாளரும்)**

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் டேவிற் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா கிறிஸ்ரி எல்மோ ஆனந்தராஜா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (15.03.2024) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செலஸ்ரீன் நடராஜா-அரியமலர் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் சேவியர் துரைராஜா-கமலாவதி தம்பதியரின் அன்பு மருமகனும் இசபெல்லா பிறேமினி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும், பிரான்சிஸ் ராஜ்குமார், காந்திமதி மகாதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் Dr.கிஷான் ஆனந்தராஜா (எலும்பு மூட்டு சத்திர சிகிச்சை நிபுணர்), அனீற்றன் ஜொஷான் ஆனந்தராஜா (கணினி பொறியியலாளர் கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெக்சிகா, நிஷாந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் றேச்சல், றயன், ஜெரின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை திங்கட்கிழமை (18.03.2024) முற்பகல் 10.00 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
மனைவி - 077 289 9485
மகன்கள் - Dr.கிஷான்- 077 327 6498
- ஜொஷான் - 077 303 9641

டேவிற் வீதி
யாழ்ப்பாணம்

(CS/54406) V-1

# நாகபூஷணி திருமண சேவை

**உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள், ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் எம்மால் தெரிவு செய்து தரப்படும்.**

இல.264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: **077 138 7596, 071 999 9306**

(CS 20218) S-1

## வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் பழைய மாணவர் சங்கம்

**வருடாந்த பொதுக் கூட்டமும்**
**புதிய நிர்வாகக் குழுத் தெரிவும் (2024-2026)**

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை), பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் குழு கூட்டமும், புதிய நிறைவேற்று நிர்வாக குழு தெரிவும் எதிர்வரும் (07.04.2024) ம் திகதி ஞயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு ஐயாத்துரை மண்டபத்தில் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. தனிநபர் பிரேரணைகள் ஏதும் உறுப்பினர்களிடம் இருப்பின் அவற்றினை எழுத்து மூலமாக (02.04.2024)ற்கு முன் செயலாளருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

அனைத்துப் பழைய மாணவர் சங்க உறுப்பினர் களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**செயலாளர் - ஐ.யசோதரன்**
**077 839 128**

(CR 41929) S-1

# பாராட்டி மகிழ்கின்றோம்



எமது ஆலய
தொண்டர் சபை உறுப்பினர்

**செல்வன் சு.பிரணவசுதன்**
**B.Sc (Hons in Statistics)**
**Second class (Upper division)**

அவர்கள்
யா/பல்கலைக்கழகத்தில்
15.03.2024 அன்று இடம்பெற்ற
பட்டமளிப்பு விழாவில்
**B.Sc (Hons)**
பட்டம் பெற்றமையை
பாராட்டி வாழ்த்துவதில்
பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

**(அம்மை அப்பன் அருள் மகத்தானது)**

Best Wishes

**பரிபாலன சபையினரும்,**
**தொண்டர் சபையினரும்,**
**வட்டுக்கோட்டை.**

**கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம்**
**கண்ணகியம்மன் ஆலயம்.**

(CR 41931)A-1

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு. வேலைக்கான கூறுவிலைக் கோரல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் **வட கடல் திருவருட் சின்ன தரிசன மண்டபம்** அமைப்பதற்கான கூறுவிலை அறங்காவலர் சபையினால் கோரப்படுகின்றது. தகைமையுடையவர்கள் ஆலயத்திற்கு நேரடியாக வருகை தந்து வேலையினைப் பார்வையிட்டு கூறுவிலைப் படிவக்கட்டணமான ரூபா 1000/ பணத்தினை செலுத்தி கூறுவிலைப்படிவத்தைப் பெற்று, பூரணப்படுத்தி 29.03.2024 ஆம் திகதி பி.ப 5.00 மணிக்கு முன்னர் ஆலயத்திற்குக் கிடைக்கக் கூடியதாக **"செயலாளர், ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் நயினாதீவு"** எனும் முகவரிக்குப் பதிவஞ்சல் மூலமாகவோ, அல்லது கோயில் நிர்வாகப் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள **"கூறுவிலைக் கோரல்"** பெட்டியினுள் இடப்படவேண்டும்.

குறிப்பு: 1. பதிவு பெற்ற ஒப்பந்தகாரராக இருத்தல் வேண்டும்.
2. ஆலய கட்டுமான வேலைகளில் முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

இவற்றுக்கான சான்றிதழ்களின் பிரதி கூறுவிலையுடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

**திரு.ந.மோகனரூபன்,**
**செயலாளர்,**
**அறங்காவலர் சபை,**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்**
**நயினாதீவு.**

(CR 41926) S-1

# மலர்ச்சாலைக்குள் வாள்வெட்டு!

கிளிநொச்சி, மார்ச் 17

கிளிநொச்சி மருத்துவமனைக்கு முன்பாக உள்ள மலர்ச்சாலை மீது நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அத்துடன் மலர்ச்சாலையின் உரிமையாளரின் மனைவியும் வாள்களால் வெட்டப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-ம-113)

# யானை தாக்கி சுற்றுலாவி சாவு

கொழும்பு, மார்ச் 17

பொத்துவிலில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணி ஒருவர் காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை நடந்துள்ளது.

உயிரிழந்தவர் இத்தாலிய சுற்றுலாப் பயணியான 50 வயதுடையவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## கஞ்சா மீட்பு!

வெற்றிலைக்கேணி, கோரியாடியில் பாலத்துக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 2 கிலோ 560 கிராம் கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. கஞ்சா இருப்பதாக இராணுவப்புலனாய்வுத் துறையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு அந்தப்பகுதியில் சோதனை நடத்தப்பட்டது.

இதன் போது 2 கிலோ 560 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட கஞ்சாப் பொதி மருதங்கேணிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-100)

## குண்டுகள் மீட்பு!

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தேவிபுரத்தில் வெற்றுக் காணியிலிருந்து போரின் போது கைவிடப்பட்ட வெடிபொருட்கள் சில பொலிஸாரால் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளன. 60மில்லிமீற்றர் மோட்டார் குண்டுகள் இரண்டு, ஆர்.பி.ஜி. வகை குண்டுகள் இரண்டு என்பனவே மீட்கப்பட்டுள்ளன. (ஒ-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும். ஒரு சதுர அடி - 100.00 ரூபாய்.

**077 334 1281**

(28102) J-1

# ரயில் போக்குவரத்துக்காக இலத்திரனியல் பற்றுச்சீட்டு

கொழும்பு, மார்ச் 17

இலங்கையில் முதன்முறையாக இலத்திரனியல் பற்றுச்சீட்டு மற்றும் இலத்திரனியல் ரயில் பயணச்சீட்டு என்பன அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை ரயில்வே திணைக்களத்தால் புகையிரத பயணிகள் மற்றும் அரச ஊழியர்களுக்கு புகையிரத பயணச்சீட்டு முன்பதிவு செயல்முறையின் முழுமையான டிஜிற்றல் மயமாக்கலின் கீழ் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் புதிய முறையின் கீழ், மிக எளிதாக பயணச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**ஏஞ்சல் சர்வதேச பாடசாலை**

**உடனடி வேலைவாய்ப்பு**

1) வாகன சாரதி - கனரக சாரதி அனுமதிப் பத்திரம் உடையவராய் இருத்தல் அவசியம்.
2) தொழில்நுட்பவியலாளர் - (Electrician & Plumber) வீட்டு மின்னிணைப்பு, நீர்க்குழாய் இணைப்பு தெரிந்திருத்தல் வேண்டும்.
3) பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆர்வமுள்ளவர்கள் அலுவலக நாட்களில் நேரில் வரவும்

மேலதிக தகவல்களுக்கு : **077 844 8020**

ஏஞ்சல் சர்வதேச பாடசாலை - மானிப்பாய் மாதர்ஸ் வீதி, மானிப்பாய்.

(CR41922) J-1

**அலுவலக மற்றும் தையல் பொருட்கள் விற்பனைக்கு உண்டு**

தையலுக்கு தேவையான பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- **070 316 4214**

(CS/54401) J-1

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பித்துள்ள (Plantation) நிறுவனம் ஒன்றிற்கு விற்பனைத்துறையில் வெற்றிடங்கள் உள்ளன.

சகல துறையிலும் ஓய்வு பெற்றவர்கள் (50 - 70 வயது) தொடர்புகொள்ளவும்.

(Call, Whats up) **076 679 0845**

(CS/54398) J-1

# பசுமை அமைதி விருதுகள் வழங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 17

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் 2023ஆம் ஆண்டுக்கான பசுமை அமைதி விருதுகளை வழங்கும் பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் நடத்தப்பட்ட சூழல் பொதுஅறிவுப் பரீட்சையில் வெற்றிபெற்ற மாணவர்கள் சூழலியல் ஆசான் க.சி. குகதாசன் ஞாபகார்த்த பசுமை அமைதி விருதுகளும், 2023ஆம் ஆண்டின் சிறந்த சூழல்நேயச் செயற்பாட்டாளர் தாலகாவலர் மு.க.கனகராசா ஞாபகார்த்த பசுமை அமைதி விருதும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். மேலும், இவ்விழாவில் 2023ஆம் ஆண்டில் மாணவர்களிடையே நடத்தப்பட்ட வீட்டுத்தோட்டப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு மாணாக்க உழவர் மதிப்பளிப்பும், தாவரங்களை அடையாளம் காணும் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு தாவராவதானி மதிப்பளிப்பும் இடம்பெறவுள்ளது. தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-27)

**தென்னங்காணி உடன் விற்பனைக்கு உண்டு**

யாழ். நகரை அண்டிய அரியாலைப் பகுதியில் ஒருங்கிணைந்த பண்ணை மேற்கொள்ளக்கூடிய 210 பரப்பு பயன்தரு தென்னங்காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- **070 316 4214**

(CS/54402) J-1

**அவுஸ்திரேலியாவில் வசிப்பதற்கு, வேலை செய்வதற்கு மற்றும் குடியிருப்பதற்கு**

ரிலையன்ஸ் இண்டர்நெஷனல் மைகிரேசன் சேர்விசஸ்

உத்தரவாதத்துடன் அவுஸ்திரேலியாவில் உங்கள் பயணத்தை இன்றே ஆரம்பியுங்கள்

**இலவசம்**

கீழ் குறிப்பிட்ட சேவைகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

உத்தரவாதமுறையிலான புலம்பெயர்தல்

- வியாபார விசாக்கள்
- பெற்றோர் விசாக்கள்
- வருகையாளர் விசாக்கள்
- குடியிருப்பவர் மீள்திரும்பல் விசாக்கள்.
- பங்காளர் விசாக்கள்
- வேலைவாய்ப்பு விசாக்கள்
- மாணவர் விசாக்கள்



**ரிலையன்ஸ் இண்டர்நெஷனல் மைகிரேசன் சேர்விசஸ்**

இல. 351/1, ஆர் ஏ த மெல் மாவத்தை, கொழும்பு - 03

+94 115 300 110 | +94 763 434 154

MARA : 1463863 | MIA - 8531

Hot Line : +94 76 767 8281

colombo@rimigrations.com www.rimigrations.com

**விற்பனைக்கு உண்டு**

Toyota Town ACE van விற்பனைக்கு உண்டு.
20 -//// பெற்றோல் வாகனம்.

தொடர்பு:- **077 667 5080**

(CS/54399) J-1

**கோழிப்பண்ணைக்கு வேலையாள் தேவை**


யாழ்ப்பாணம் அளவெட்டியில் உள்ள JK Poultry Farm இல் வேலை செய்வதற்கு 20 வயதிற்கு மேற்பட்ட ஆரோக்கியமான ஆண் வேலையாள் தேவை. வேலைப் பளுவிற்கேற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்களை Whats app இல் **077 772 2754** என்னும் இலக்கத்திற்கு அனுப்பவும் இந்த இலக்கத்திற்கு அழைப்பு எடுக்க வேண்டாம்.

நேரடித் தொடர்புகளுக்கு **075 772 0604** என்னும் இலக்கத்தைப் பாவிக்கவும்.
(வார நாட்களில் பி.ப. 2 மணிக்கும் 5 மணிக்கும் இடையில் மாத்திரம்)

(CR/41921) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 06 . 05 . 1936

மறைவு 10 . 03 . 2024

**காசிப்பிள்ளை தளையசிங்கம் (வைத்திலிங்கம்)**

(முன்னாள் கிராம சேவையாளர் - அல்லைப்பிட்டி, சரவணை, கோண்டாவில் , யாழ்ப்பாணம்)

யாழ்.புங்குடுதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், அரசடி வீதியை வசிப்பிடமாகவும், பிரான்ஸ் Paris Epone ஐ தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை தளையசிங்கம் அவர்கள் கடந்த (10.03.2024) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - செல்வநாயகி தம்பதியரின் பாசமிகு மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான சபாரெத்தினம் (பெரியசபா) - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சபாராணி அவர்களின் ஆருயிர்க் கணவரும், ஞானச்சந்திரன் (சந்திரன்) அவர்களின் பாசமிகு தந்தையும், பத்மசுகி அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சிவஞானேஸ்வரி, திருலோகவதி, இராஜேஸ்வரன் மற்றும் சாந்தசிவரூபி (இலங்கை), காலஞ்சென்ற ரேவதி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சர்வானந்தன், காலஞ்சென்ற பங்கயற்செல்வி மற்றும் சபாமணி, காலஞ்சென்ற காந்திசொரூபன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான நாகராசா, செல்வரெத்தினம் மற்றும் சாந்தகுமாரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சாந்தலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை, நவரெட்ணராஜா ஆகியோரின் அன்புச் சகலனும், நிதர்ஜன் (பிரான்ஸ்), நிரோஜினி (பிரான்ஸ்), நிவேதனா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நாளை (18.03.2024) திங்கட்கிழமை நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகன் - சந்திரன்
(பிரான்ஸ்)
0033623484196

தகவல்: R.சோமசுந்தரம்
(யாழ்ப்பாணம்-பரிஸ் ரெக்ஸ்)
0777302323

(28177) S-1

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றிற்கு கீழ் வரும் பணியாளர்கள் உடன் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

1) **சமையலாளர் (Chef):**
யாழ்ப்பாணத்து பாரம்பரிய உணவு வகைகள் செய்யத் தெரிந்திருத்தல் வேண்டும்.
சம்பளம் : நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
வயது எல்லை :20-55

2) **சமையல் உதவியாளர் (Kitchen helper) :**
வயது எல்லை: 20-55

3) **பாதுகாவலர் (Security):**
(தமிழ், ஆங்கிலம், சிங்களம் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது)
இத் துறை சார்ந்த குறைந்தது 1 வருட அனுபவம் அவசியம் மற்றும் வயது எல்லை : 20-50

4) **வரவேற்பாளர் (Receptionist) :**
தமிழ், ஆங்கிலம், சிங்களம் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.
அடிப்படை கணினி அறிவு மற்றும் குறைந்தது 1 வருட அனுபவம் அவசியம்.

5) **கணக்காளர் (Accountant):**
கணினி அறிவுடன் இத் துறை சார்ந்த அனுபவம் அவசியம்.

6) **தோட்டப் பராமரிப்பாளர் :**
இத் துறை சார்ந்த அனுபவம் அவசியம்.
வயது எல்லை : 20-50

தொடர்புகளுக்கு:- **077 251 4981, 077 872 9806**

**நேரில் சமுகம்தரவேண்டிய முகவரி:**
195, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(195, Temple Road, Nallur, Jaffna)

(CR 41925) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனைக்கு



Komatsu PC 30 எக்ஸ்கவேடர் இயந்திரத்திற்கான Track Rollers,

Track Group, Idlers, Sprockets, Tooth, Pin மற்றும் Adaptors விற்பனைக்கு.

இன்றே அழையுங்கள் 076 537 0506

(CS.272214) (n-1)

## தேவை

வீட்டுப் பணிப்பெண் தேவை.

தொடர்புகளுக்கு:

(CS/54388) J-1

077 426 6542

## யாழ் நகரில் கட்டடம் தேவை

பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்கு, **சுமார் 12,000 - 15,000 சதுர அடி** பரப்பளவு, **மும்பரிமாண** மின்சாரம், மின் தூக்கி என்பவற்றுடன், **ஐந்து வாகனங்களை** நிறுத்தும் இடவசதி கொண்ட, கவர்ச்சிகரமான சூழலில் பூந்தோட்டங்களுடன் கூடிய கட்டடம் ஒன்று **யாழ்ப்பாண நகர எல்லைக்குள் தேவை.** தடையற்ற மின்சாரத்திற்கு ஜெனரேட்டர் காப்பு அத்தியாவசியமானது. ஆர்வமுடையவர்கள் **076 820 9542** என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(CR/41907) J-1

## வாடகைக்குத் தேவை

கல்வி நிறுவனம் ஒன்றிற்கு வீடு / காணி / கட்டடத்தின் மேல்தளம் வாடகைக்குத் தேவை. யாழ் நகரில் K.K.S வீதியில், நாவலர் வீதியில் தேவை.

(CS/28208) J-1

076 546 6628

## வீடு வாடகைக்கு தேவை

அரச உத்தியோகத்தில் பணிபுரியும் சிறிய குடும்பத்திற்கு யாழ். நகரை அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.

(CS/54397) J-1

தொடர்பு:- 077 722 2262

## தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள உணவகத்திற்கு சமையலாளர், சமையல் உதவியாளர் தேவை.

(CS/54383) J-1

தொடர்பு:- 077 062 6507

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## Vacancy Advertisement for Community Liaison Assistant

The HALO Trust is the world's largest and oldest international humanitarian mine action non-government organization (NGO). For over thirty years, we have been saving lives and helping war-torn communities recover, by making their land safe. Our mission is to protect lives and restore the livelihoods of those affected by conflict.

HALO has been working in Sri Lanka since 2002 and now has over 1,000 staff working in the Northern Province with offices in Jaffna, Kilinochchi and Mullaitivu. To date, HALO has safely destroyed over one million items of explosive ordnance, including more than 270,000 anti-personnel landmines. HALO and other mine action stakeholders are working to clear Sri Lanka of all known contamination by 2028 to meet Sri Lanka's obligations as a state party to the Anti-Personnel Mine Ban Convention.

In preparation for Sri Lanka reaching mine-free status, we are looking to recruit Community Liaison Assistant for Kilinochchi, Kokkuthoduvai and Muahamlai. The Community Liaison Assistant, delivery of all completion liaison activities, including supporting of Community Survey team. Provide support to ensure the National Completion Liaison Process is delivered on time and to a high standard.

### The CLAs Responsibilities are.

**Community liaison:**

- Support Community Liaison Manager to maintain links with other NGOs, local community, and government departments.
- Attend donor and other stakeholder meetings to provide support, namely with photography.

**Monitoring, evaluation, accountability, and learning (MEAL):**

- Support the Community Liaison Officer with data collection for programme activities including 1) post-clearance household surveys with beneficiary households; 2) pre- and post- surveys of staff members who participate in staff livelihood transition activities.
- Data cleaning and data analysis of all data collected.
- Participate in other data collection processes as needed by the programme, including conducting surveys, key informant interviews and subsequent data cleaning and data analysis.

**Explosive Ordnance Risk Education (EORE):**

- Support the CL Manager and CL Officer to set up Explosive Ordnance Risk Education (EORE) sessions, including setting up the sessions and handing out EORE materials.
- Conduct pre- and post-session assessments during EORE sessions to measure changes in knowledge.

**Other:**

- Participate in relevant trainings provided by the Donor Relations Manager (DRM) and CL Manager on conducting surveys and data collection.
- Supporting the DRM with donor reporting requirements with data and narrative in a timely manner as requested.
- Any other duties as specified by CL Manager, Human Resources Business Partner (HRBP), Deputy Programme Manager (DPM), DRM, Operations Manager and Programme Manager.

All applications must be submitted to the below address no later than **Friday 28 March 2024 either by Post or via email below.** "If there is a sufficient caliber of applicants, we reserve the right to close the role earlier than the date noted." Only successful applications will be contacted. For further information, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply for this role. We especially welcome applications from female candidates.

**HR Manager**
**The HALO Trust,**
**450 Thirunagar West, Kilinochchi**
**hr@halosrilanka.org**

(cr.41924) (N-1)

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## கண்ணிவெடி அகற்றுநர்களுக்கான பதவி வெற்றிடம் - கொக்குத்தொடுவாய்

ஹலோவானது 10,000 க்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட 30 நாடுகள் மற்றும் பிரதேசங்களில் மோதல்களின் தாக்கம் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்யும் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் அமைப்பாகும். எங்கள் ஊழியர்களில் பெரும்பாலானோர் உள்ளூர் ஊழியர்கள் மற்றும் அதிகரித்து வரும் பெண்களின் எண்ணிக்கையினை உள்ளடக்கியது.

2002 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் பணியாற்றி வரும் ஹலோ தற்போது வட மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய இடங்களில் அலுவலகங்களைக் கொண்ட 1,000 க்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்டுள்ளது. இன்று வரை, 270,000 க்கும் மேற்பட்ட தனிநபர் எதிர்ப்பு கண்ணிவெடிகள் உட்பட ஒரு மில்லியனுக்கும் அதிகமான வெடிபொருட்களை ஹலோ பாதுகாப்பாக அழித்துள்ளது. தனிநபர் எதிர்ப்பு கண்ணிவெடி தடை சமவாயத்தின் அரச தரப்பு என்ற வகையில் இலங்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2028 ஆம் ஆண்டளவில் இலங்கையில் அறியப்பட்ட அனைத்து மாசுபாடுகளையும் அகற்றுவதற்கு ஹலோ மற்றும் பிற கண்ணிவெடி நடவடிக்கை பங்குதாரர்கள் பணியாற்றி வருகின்றனர்.

கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருட்களை அகற்றுவதற்கு ஆதரவு அளிப்பதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கொக்குத்தொடுவாய் பகுதிக்கு கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்ய உள்ளோம்.

**கண்ணிவெடி அகற்றுநரின் பொறுப்புகளாவன:**

- பாதுகாப்பு விதிகளை கண்டிப்பாக கடைப்பிடித்தல் மற்றும் எப்போதும் தரப்படுத்தப்பட்ட நடவடிக்கை நடைமுறைகளைப் (SOP) பின்பற்றுதல்.
- வேலை நாளின் தொடக்கத்தில் அவனது / அவளது பணிபுரியும் பகுதியைத் தயார் செய்தல், கருவிகள் மற்றும் அடையாளப்படுத்தல் கருவிகள் பாதுகாப்பான மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் தரையில் வைக்கப்பட்டிருப்பதனை உறுதி செய்தல்.
- தரப்படுத்தப்பட்ட நடவடிக்கை நடைமுறைகளின்படி (SOP) துப்புரவாக்கல் பயிற்சிகளை நடத்துதல்
- அவரது / அவளது PPE, டிடெக்டர், கருவிகள் மற்றும் உபகரணங்களின் சேவைத்திறனை கவனித்தல் மற்றும் உறுதி செய்தல்
- ஒரு கண்ணிவெடி, மற்றும் வெடிக்காத வெடிபொருட்கள் UXO அல்லது அறியப்படாத பொருளைக் கண்டறிவதை குழுத் தளபதியிடம் புகாரளித்தல்
- குழு தளபதியுடன் ஒத்துழைத்தல் மற்றும் நாள் முழுவதும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அறிக்கையிடுதல்.
- பொருத்தமானதாக இருந்தால், அவன் / அவள் பயிற்சி பெற்ற அனைத்து டிடெக்டர் களின் சரியான செயல்பாடு மற்றும் அளவுத்திருத்தம் போன்றவற்றை வேலை நாள் முழுவதும், தரப்படுத்தப்பட்ட நடவடிக்கை நடைமுறைகளில் (SOP) விவரிக்கப் பட்டுள்ள நடைமுறைகளுக்கு இணங்க செயல்படுத்தல்.
- கண்ணிவெடி சமிக்ஞைகளை (விசில் சத்தங்கள்) புரிந்துகொண்டு அதற்கேற்ப செயல்படுதல்.

அனைத்து விண்ணப்பங்களும் **05 ஏப்ரல் 2024 வெள்ளிக்கிழமைக்குள்** கீழே **உள்ள முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்பட வேண்டும்.** "விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை போதுமான அளவு இருந்தால், குறிப்பிட்ட திகதியை விட முன்னதாக வெற்றிடத்தினை மூடுவதற்கான உரிமையை நாங்கள் கொண்டுள்ளோம்." வெற்றிகரமான விண்ணப்பங்கள் மட்டுமே தொடர்புகொள்ளப்படும். மேலும் தகவலுக்கு, 021 228 5466 தொலைபேசி இலக்கத்தினைத் தொடர்புகொள்ளவும். அனைத்து வகையான தொழில் திறமைகளைக் கொண்டவர்களும் இப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம். குறிப்பாக பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்கிறோம்.

**மனிதவள முகாமையாளர்,**
**ஹலோட்ரஸ்ட்,**
**450 திருநகர் மேற்கு, கிளிநொச்சி.**
**hr@halosrilanka.org**

(cr.41923) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டுக்கோட்டையில் இளைஞன் கொலை

# கடற்படையினரின் செயற்பாடு: ம.உ.ஆ. விசாரணை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

வட்டுக்கோட்டை இளைஞனின் கொலைக்கு கடற்படையினர் உடந்தையாக இருந்தனர் எனக் குற்றம் சுமத்தப்படும் நிலையில், அது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் யாழ். பிராந்திய அலுவலகம் தனது விசாரணைகளை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பித்துள்ளது.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தவச்செல்வம் பவித்திரன் (வயது - 23) என்ற இளைஞன் பொன்னாலைச் சந்தியில் வைத்து கும்பலால் காரில் கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தார். அவர் தனது மனைவியுடன் கடற்படையினரிடம் அபயம் கோரியபோதும் கடற்படையினர் அவர்களைத் தாக்கி விரட்டியடித்தமை தொடர்பான காணொலி வெளியான நிலையில் அது தொடர்பில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகம் தனது சொந்தப் பிரேரணையாக எடுத்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (அ-ஒ-20)


## விற்பனைக்கு

வோட்டர் கூலர் - 2
Stand Fan - Big - 2
Shop பிறாக்கை - 4, Glass பிற்றிங் 2,
மர அலுமாரி - 1

077 465 6325

## வேலை ஆட்கள் தேவை

ஆண், பெண்
இருபாலாருக்கும்
வேலை வாய்ப்பு

077 724 2427, 077 741 2713

## வீடு வாடகைக்கு தேவை

வெளிநாட்டில் இருந்து வந்து தங்கி இருப்பதற்கு மாத அடிப்படையில் அல்லது ஒரு வருடத்திற்கு வீடு வாடகைக்கு தேவை.
AC வசதி விரும்பத்தக்கது.

077 959 2628

(CR 41937) S-1


# அரசியல் தீர்வு: அநுர மௌனம்



கிளிநொச்சி, மார்ச் 17

ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக்காக வடக்குக்கு வருகை தந்துள்ள தேசிய மக்கள் சக்தியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அரசியல் தீர்வு தொடர்பில் திட்டவட்டமாக எதையும் தெரிவிக்கவில்லை.

கிளிநொச்சி மக்களுடன் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நேற்று கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் அவர் பல்வேறு விடயங்கள் தொடர்பில் பேசியபோதும், அரசியல் தீர்வு தொடர்பில் தெளிவான நிலைப்பாட்டை முன்வைக்கவில்லை.

"தமிழ் மக்கள் நாட்டின் பொதுப் பிரச்சினைக்கும் முகம் கொடுக்கிறார்கள். தமிழ் மக்களாகவும் பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். இந்தப் பிரச்சினைகளால்தான் அரசியல் கட்சிகள் நாட்டில் உருவாகின. ஜனாதிபதித் தேர்தலை வடக்கு மக்கள் தங்களுக்குரிய தேர்தலாகப் பார்ப்பதில்லை. அந்த நிலைமையை நாம் மாற்றியமைப்போம். சிங்கள மக்கள் வசிக்கும் பிரதேசத்தில் எமக்குப் பலமான அணி உள்ளது. தமிழ் மக்களையும், முஸ்லிம் மக்களையும் இணைத்து நாம் பயணிப்போம். சமஷ்டி தருவோம், '13 ஐ தருவோம் எனச் சொல்லி நாங்கள் வாக்குக் கேட்கவில்லை. நாம் ஆட்சி அமைத்தால் தமிழ்மொழி உரிமையை அனைத்துத் திணைக்களங்களிலும் நடைமுறைப்படுத்துவோம். தேசிய மக்கள் சக்தி அமைக்கும் அரசாங்கத்தில் வடக்கு அமைச்சர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும். போரின் பின்பு தெற்கு அரசியல்வாதிகளுக்கு வடக்கு நிலங்கள் பெரும்பாலும் உரிமையாகியுள்ளன" - என்றார். (அ-ஒ-113)


## 1ஆம் ஆண்டு நினைவு நாள்
(17.03.2024)



அமரர் கந்தையா வன்னியசிங்கம்
(உரிமையாளர் விஜயா மில்)

உழைப்பிற்கோர் உதாரணமாய்
உறவுகளை அணைப்பதிலே இலக்கணமாய்
வாழ்ந்த உன் வாழ்வின் சிறப்பதனை
அறிந்தோம் உந்தன் சுகமான மரணத்தில்
ஓராண்டென்ன எம் ஆயுள் வரை
எம்முள் என்றும் நிலைத்திருக்கும் உம் நினைவு

விஜயா மில்,
புலோலி தெற்கு.

குடும்பத்தினர்
077 928 9947

(CR 41714) A-1


# வீட்டில் மாட்டை இறைச்சியாக்கிய பொலிஸ் அலுவலர் தப்பியோட்டம்

பருத்தித்துறை, மார்ச் 17

வீட்டில் வைத்து சட்ட விரோதமான முறையில் மாட்டை இறைச்சியாக்கிய சம்பவத்துடன் தொடர்புபட்டு தப்பியோடித் தலைமறைவாகியுள்ள பொலிஸ் உத்தியோகத்தரான பிரதான சந்தேகநபரைக் கைது செய்து மன்றில் முற்படுத்துமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபரின் தாயாருக்கும் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

புலோலியிலுள்ள வீட்டில் சட்டவிரோதமான முறையில் மாடு இறைச்சியாக்கப்படுவதாக நேற்றுச் சனிக்கிழமை காலை விசேட அதிரடிப்படையினருக்கும் பருத்தித்துறைப் பொலிஸாருக்கும் இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

பொலிஸாருடன் இணைந்து விசேட அதிரடிப்படையினர் அந்த வீட்டைச் சோதனையிட்டபோது மாடு அறுத்துக் கொண்டிருந்தவர்கள் தப்பிச்சென்ற நிலையில், வீட்டு உரிமையாளரான பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று முற்படுத்தியபோது வழக்கை விசாரித்த நீதிவான் பொன்னுத்துரை கிரிசாந்தன் சந்தேகநபரை நாளைமறுதினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அதேவேளை மாட்டை இறைச்சியாக்கிய நிலையில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரைக் கண்டதும் தப்பியோடிய பிரதான சந்தேகநபரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கைதான பெண்ணின் மகனான பிரதான சந்தேகநபர் பொலிஸ் உத்தியோகத்தராகக் கடமையாற்றி வந்த நிலையில் சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கடமையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-100)


## துயர் பகிர்கிறோம்



கந்தையா பேரம்பலம்

முகமாலையை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் உசனையும் பின்னர் திருநெல்வேலியையும் வதிவிடமாகவும் கொண்ட முன்னைநாள் உதவி கல்விப் பணிப்பாளர் கந்தையா பேரம்பலம் அவர்கள் நேற்று மாலை 7.00 மணியளவில் இயற்கையெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-கனகம்மாவின் புதல்வரும் காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, கணபதிப்பிள்ளை, தம்பிராசா, குலசேகரம்பிள்ளை, நடராசா ஆகியோரினதும் மற்றும் சிவபாக்கியத்தின் அன்புச் சகோதரரும் துக்ஷ்யந்தி, அரவிந்தன், ரகுவிந்தன், விநோவிந்தன் ஆகியோரின் தந்தையாரும் மிகுந்தன், சேர்மினா, ரேணுகா, கமலவேணி ஆகியோரின் மாமனாரும் மிதுறிகா, துமிலன், வக்க்ஷலன், கேசவி, ஆரபி, ரங்கீத், ரோகித், விகாஸ் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று மாலை 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று (15/25, மாரியம்மன் வீதி - முதலாம் ஒழுங்கை திருநெல்வேலி) பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 28228) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வாவின் வழியில் தமிழரசின் பயணம் தொடரும்

## சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 17
தமிழரசுக் கட்சியினர் என்றும் ஒற்றுமையாகச் செயற்பட்டு தந்தை செல்வாவின் வழியில் எமது மக்களுக்கான பயணத்தைத் தொடர்வார்கள். உட்கட்சி மோதல்கள் எமது மக்களுக்கான குறிக்கோள்கள் கொள்கைகளை சிதைப்பதில்லை என்று தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சிக்குள் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் குழப்பங்கள் தொடர்பிலேயே சாணக்கியன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழரசுக் கட்சியாக நாம் இன்னும் வலுப்பெற்றுள்ளோம். ஒரு குடும்பத்தில் மனஸ்தாபங்கள், சிறுசிறு சண்டைகள் வருவது இயல்பு. ஆனால் அவை தீரும் போது வரும் ஒற்றுமை மற்றும் நம்பிக்கைதான் தற்போது எமக்கும் ஏற்பட்டுள்ளது. நாம் என்றும் எம் மக்களுக்காகவே பயணப்படுகின்றோம். ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்று சொல்வார்கள். அதற்கு நாம் இடமளிக்கப் போவதில்லை - என்றார். (ம-26)

## நிர்மாணத்துறை நெருக்கடி தீர்வுகளுக்கு நிபுணர் குழு

தற்போதைய பொருளாதார நிலைமையில் நிர்மாணத் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்க நிபுணர்குழு நியமிக்கப்படவுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

நிர்மாணத்துறையிலுள்ள கைத்தொழில் துறையினருடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் கைத்தொழில் துறையினருக்கு நிவாரணம் வழங்கி ஊக்கமளிக்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (ச-இ)


### மணமகள் தேவை

யாழ். இந்து (V) 1990 கடகராசி ஆயிலிய நட்சத்திரத்தில் பிறந்த வங்கி ஒன்றில் நிரந்தர பாதுகாப்பு உத்தியோகத்தராக பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

Phone No: 076 075 1357

### வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பலசரக்கு கடைக்கு சிட்டைப்படி பொருட்கள் பொதி செய்ய நல்ல அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை.
சம்பளம் 2000/-+300 (மதிய உணவு)

077 6280 685, 076 915 8072

### வீடு வாடகைக்கு தேவை

இருவர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு யாழ் நகரில் ஐந்து Km க்குள் ரூ 15000க்குள் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 077 6280 685

### வீடு விற்பனைக்கு

கப்பம்புலம், புன்னாலைக் கட்டுவன் வடக்கு, பாரதி வீதியில் 2 1/2 பரப்புக் காணியில் அமைந்துள்ள 04 அறை, சமயலறை, வரவேற்பு அறை, குளியலறை கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 8449687

தரம் 6-11 வரையான மாணவர்களுக்கு தமிழ் மொழி மூலமாகவும் ஆங்கிலமொழி மூலமாகவும் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி அருகாமையில் கற்பிக்கப்படும்.

தொடர்பு: 077 466 6031

### கடைகள் வாடகைக்குண்டு

யாழ். பல்கலைக்கழகம் முன்பாக கடைகள் வாடகைக்குண்டு

தொடர்புகளுக்கு: 074 234 9120

### தேவை

பில் கிளார்க், பொதியிடல், உதவியாளர், மாவறுத்தல், என்பவற்றிற்கு பெண் ஊழியர்கள் தேவை.

தொடர்பு: பிருந்தா மில்
184, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 077 1746 101

மேலும் அரிசிமா (190.00), மிளகாய் தூள், ஆட்டாமா என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

### தேவை

நெல் உடைப்பதற்கு, பொதி செய்ய, அனுபவமுள்ளவர்கள், சாரதிகள், கூலியாட்கள்.
மாப்பியன் மில் - சுதுமலை
077 7722 215

### வேலையாட்கள் தேவை

மேசன், தச்சன், வெல்டர் மற்றும் உதவியாட்கள் தேவை.

தொடர்பு: 077 5533 601
071 6933 601

### விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள 43'' TV, குளிர்சாதனப் பெட்டி, கிரைண்டர், Oven, ஒற்றைக் கட்டில், Dressing Table, மேசை Stool மற்றும் மருந்து அடிக்கும் Sprayer உடனடி விற்பனைக்கு.

தொடர்பு: 076 830 7424

### வேலையாட்கள் தேவை

30 வயதிற்கு உட்பட்ட விற்பனை உதவியாளர் யாழ். நகரில் உள்ள சைவ உணவகத்திற்கு தங்கி வேலை செய்யக் கூடிய களஞ்சிய காப்பாளர், பாதுகாப்பு உத்தியோகத்தர்

076 44 14 74 9

### சமையலாள் தேவை

கோப்பாயில் 2 பேர் கொண்ட குடும்பத்துக்கு வீட்டுச் சமையலுக்கு பெண் தேவை. தங்குமிட வசதி தேவைப்படின் ஒழுங்கு செய்து வழங்கப்படும்.



சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 077 120 9998

### இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

பிரிவு-52

* Diploma in English / Spoken English
* Diploma in ICT
* Diploma in Artificial Intelligence (AI)
* Diploma in Psychology & Counselling
* Diploma in Caregiving
* Diploma in Hotel Management
* Diploma in Business Management
* Diploma in Political Science
* Diploma in Law
* Diploma in Nursing Assistant
* Diploma in Computerised Accounting

ஆரம்பம்:23.03.2024, 10.00AM

காலம்: 3 மாதங்கள் | பெறுமதிமிக்க சான்றிதழ்

IPS Thirunelvely, Jaffna. T.P:074 2349120

(CS 28226) A-1

### தவறவிடப்பட்டது

யாழ் நகர் சத்திரத்து சந்தி வீதியில் இருந்து மருத்துவமனை வீதியில் நேற்று (15.03.2024) மாலை 03.00 - 03.30 மணிக்கு இடையில் தங்க நகைகள் அடங்கிய மருண் கலர் கைப்பை ஒன்று தவறவிடப்பட்டுவிட்டது. இது தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்கள் பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தெரியப்படுத்தி உதவுங்கள்.

தொடர்புகளுக்கு: 077 770 3875/ 077 531 3678

### காணி விற்பனை



கோண்டாவில் பிரதேச வைத்திய சாலைக்கு அருகாமையில் சகல அடிப்படை வசதிகளை கொண்ட வீட்டுடன் 3 பரப்பு, 3 குழியுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு. திருநெல்வேலி சந்தைக்கு அருகாமையில் 3 3/4 பரப்பு, 2 துண்டுகளாக பிரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 076 262 7084
077 119 0220
ஐயப்பன் ரியல் எஸ்டேட்

### காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியில் புத்தூர்ச் சந்தியிலிருந்து - கைதடி, சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து 100m இல் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.
2 பரப்பு - 4 1/2 லட்சம்.
தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்:
காலை: 8.30 - மாலை 6.00

தொடர்புகளுக்கு: 076 659 0583
074 260 0617
076 109 8504

(CS 24041) A-1

### உள ஆற்றுப்படுத்தல் டிப்ளோமா பயிற்சி நெறி 2024-2025

கொழும்பு Tertiary and Vocational Education commission இன் அங்கீகாரம் பெற்ற அகவொளி உள ஆற்றுப்படுத்தல் நிறுவனம் நடாத்தும் உள ஆற்றுப்படுத்தல் டிப்ளோமா கற்கை நெறிக்குத் (Diploma in Psychological Counselling) தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை:**
அதிகுறைந்த தகைமையாக க.பொ.த.[உயர்தரம்] சித்தி

**கற்கை நெறியின் தனித்துவங்கள்:**
உளவியல் துறையில் தகைமை (M.Sc., M.Phil., B.A) வாய்ந்த வளவாளர் குழாமினால் நெறிப்படுத்தப்படுகின்ற இக் கற்கை நெறியானது செயல் முறைப் பயிற்சிகளையும், உள ஆற்றுப்படுத்தல் சார்ந்த ஆய்வினையும் கொண்டுள்ளது.

**கற்கை நெறியின் மொழி:** தமிழ்

**காலம்:** ஒரு வருடம்

**நாட்கள்:** சனி, ஞாயிறு

**நேரம்:** காலை 09.00 - 09.15

**கட்டணம்:** அறுபது ஆயிரம் [60,000]

**பதிவுக்கட்டணம்:** ரூபா 1000

**விண்ணப்ப முடிவுத் திகதி:** 30.03.2024

**மேலதிக விபரங்களுக்கு:**
பணியகம் - 021 222 2856, 077 904 7651, 076 736 6655
இயக்குநர்,
அகவொளி உள ஆற்றுப்படுத்தல் நிறுவனம்,
சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(CS 28217) S-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'யுக்திய'வில் துப்பாக்கிச்சூடு:

# சட்டமா அதிபர் திணைக்களம் பொலிஸுக்காக முன்னிலையாகாது

கொழும்பு, மார்ச் 17

'யுக்திய' நடவடிக்கையின்போது ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டமைக்கு எதிராக அவரது மனைவியால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பொலிஸாருக்காக சட்டமா அதிபர் திணைக்களம் முன்னிலையாகாது என்று அறிவித்துள்ளது.

நாரம்மல பிரதேசத்தில் யுக்திய நடவடிக்கையின் போது ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். இதையடுத்து, அவரது மனைவி உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

'பொலிஸ் அதிகாரிகள் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் சட்டம் ஒழுங்கைப் பின்பற்றவில்லை' என்று குறிப்பிட்டுள் ளார். அத்துடன் தனது கணவர் சுட்டுக்கொல்லப்பட்ட சின தினங்களில் வீட்டுக்கு வந்த பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தனக்கு 10 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலையை வழங்கினார் என்றும் மனுவில் தெரிவித்துள்ளார். தனது கணவரின் உயிரிழப்புக்கு பொலிஸாரும் அரசுமே காரணம் எனக் குறிப்பிட்டு 200 மில்லியன் ரூபா இழப்பீட்டை அவர் கோரியுள்ளார். (ஒ-6)


## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த 1989ம் ஆண்டு பரணி நட்சத்திரம் கிரக பாவம் 22 செவ்வாய் 8 இல் உள்ள நிரந்தரமாக அரச திணைக்களத்தில் தொழில்புரியும் (HNDIT) மணமகனுக்கு பொருத்தமான தொழில்புரியும் மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமகள் வடமராட்சிக்கு அண்மையில் வசிப்பவராக இருத்தல் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 864 9878, 077 6343 103

## காணி விற்பனைக்கு

வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "ஓடைப் புளியடி" (கலிபா ஆசன லெப்பை வீதி, கலிபா அப்துல் ஹமீத் வீதி, B.S Lane) அமைந்துள்ள 1 பரப்பு காணியில் 2 அறைகளைக் கொண்ட வீடு, கிணறு, மலசலகூட வசதி, மின்சார வசதிகளுடன் கூடியது. இடைத்தரகர் தேவையில்லை உறுதிக்காணி விருப்பம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.




S. சதீஸ்குமார்

077 493 3604 / 077 885 0389

## காணி விற்பனைக்கு உண்டு

### நெல்லியடி நகரத்தில் 15 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- நெல்லியடி நகரத்திலிருந்து 2 km தூரத்தில்
- விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலிருந்து 500m தூரத்தில்
- உச்சி அம்மன் கோயில் அருகாமையில்
- 16 அடிப்பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பெற்றோல் செற் முன் வீதியில் 2 Km தூரத்தில் நெல்லியடி
- பொலிஸ் நிலைய அருகாமை வீதியில் 2 Km தூரம்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை ஐந்து இலட்சம் ரூபாய் மட்டும் (500 000/=)

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்பு: 071 173 3911 / 076 853 5022

(CS28183) (N-1)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 21.06.1946 — மறைவு 29.03.2023

அமரர் மாரிமுத்து குலசேகரம்

திதி : 17.03.2024

(ஓய்வு நிலை அதிபர்)

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஆண்டு ஒன்று சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இராச வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
021 223 2890

(CS/54351) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 05.06.1933 — மறைவு 12.03.2024

## தவமணி கனகரத்தினம்

கொக்குவிலை பிறப்பிடமாகவும், கே. கே. எஸ். வீதி கோண்டாவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தவமணி கனகரத்தினம் அவர்கள் 12.03.2024 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - தங்கம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - இராசம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கனகரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஸ்ரீரங்கநாதன் மற்றும் முரளீதரன் (லண்டன்), யுகபாலன் (இலங்கை), சந்தானகோபாலன் (சுவிஸ்), பேரின்பநாயகி (இலங்கை), வரதாமணி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரதிதேவி (லண்டன்), மைதிலி (லண்டன்), காலஞ்சென்ற லோகநாயகி, கிறிஸ்தா (சுவிஸ்), கணேசலிங்கம் (இலங்கை), உதயதாசன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற நடராசா அவர்களின் அன்புச் சகோதரியும், குலசிங்கம் (அஷ்டாங்க யோகி), காலஞ்சென்றவர்களான கமலேஸ்வரி பத்மாவதி ஆகியோரின் மைத்துனியும், கணதர்சினி, சிவதர்சினி, கமலதர்சினி ஆகியோரின் பெரியதாயும், நிர்மலாதேவி, சண்முகவடிவு, குலநாயகி, ஞானஉதயன் விக்கினேஸ்வரன், விக்கினேஸ்வரி, நகுலேஸ்வரி, கனகேஸ்வரி, சுந்தரேஸ்வரி ஆகியோரின் மாமியாரும், பிரபா - பிரதீஸ், கஜன் - நவுனித், ஜெகன், சித்திரகலா - சிவானந்தன், விலோஷனி - செல்வசுந்தரா, பிரகாஜினி - திருக்குமரன், கோகுலன், திவாகரன், ஜெனித்தா - கௌதமன், சஹானா - Leonardo Pusterla, சர்வேஸ்வரன், ஆனந்தன், ஆர்த்தி, ஆதித்தன் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற பிரவினி மற்றும் ஹரிசன், லக்ஷயா, பானுஜா, கஜலக்ஷன், கிஷானிகா, விதுர்ஜன், திருக்ஷிகா, விஹாசன், விஹானா, Mohana Florian ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2024) ஞாயிற்றுக்கிழமை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு.

(CS/28198) J-1

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைவு சாத்தியமில்லை

ஜே.வி.பி. மற்றும் முன்னிலை சோஷலிசக் கட்சி என்பவற்றின் சங்கமம் சாத்தியப்படாத தொன்றாகும் என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார். துரோகிகளுடன் இணைந்து செயற்படத் தயாரில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஓ-44)

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ் நகரை அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை. (CS/54393) J-1

தொடர்பு:- 077 958 6997

**காணி விற்பனைக்கு**

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அருகாமையில் தபால் கந்தோர் வீதியில் 200m தூரத்தில் இருபக்க பாதை வசதிகளுடன் 12 பரப்பு 16 குளி காணி விற்பனைக்கு உண்டு - தெளிவான ஆவணங்களுடன். விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம். தரகர் தொடர்பு கொள்ளவேண்டாம். (CS/54059) J-1

தொடர்பு:- 077 136 2490

**விற்பனைக்கு**

TVS NTO R2 125 Race Edition விற்பனைக்கு உண்டு. 3050 Km மட்டுமே. with warranty (CS/54364) J-1

077 777 0394, 077 792 2265

**மணமகள் தேவை**

1990 யாழ். இந்து (V) உத்தரட்டாதி 7 இல் செவ்வாய் கிரகபாவம் 70 உடைய யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி BA பட்டதாரி ஆசிரியர் மணமகனுக்கு வடமராட்சி பகுதியைச் சேர்ந்த அரச தொழில் புரியும் மணமகள் தேவை. (CR/41913) J-1

077 562 7795

**காணி விற்பனைக்கு உண்டு**

(768) யாழ். கீரிமலை அம்பனை வீதி அருகில் உள்ள அம்பத்தை பாதையின் முதல் காணி 4 பரப்பு, 12 குளி கிணற்றுப் பங்கு பாவனையுடன் விற்பனைக்கு உண்டு. (CS/28161) J-1

தொடர்பு:- 076 639 9443

**வீடு வாடகைக்கு**

சாவகச்சேரியில் Bus நிலையத்துக்கு மிக அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு. (CS/54396) J-1

077 722 2715

**காணியும் வீடும் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் மருதடி வீதியில் அமைந்துள்ள நிலப்பரப்பு ( 2 3/4 ) இரண்டே முக்கால் விஸ்தீரணமுடைய காணியும் அதிலுள்ள ( 2 ) இரண்டு வீடுகளும் விற்பனைக்கு உண்டு. (CS/54394) J-1

தொடர்பு:- 077 430 6616

**ஆண் சமையலாளர் தேவை**

முழங்காவிலில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு ஆண் சமையலாளர் தேவை. (CS/54386) J-1

077 967 6403, 074 001 5060

**வேலையாள் தேவை**

கொக்குவில் தாவடியில் இயங்கிவரும் பிரபல்யமான அரிசி ஆலை ஒன்றிற்கு கனரக சாரதி தேவை. (CS/54372) J-1

தொடர்பு:- 076 096 9728

**வீடு வளவு நெற்காணி விற்பனைக்கு**

பறாளாய் வீதியில் 6 பரப்பு விஸ்தீரணமுள்ள 3 அறைகள் உடைய வீடும், தனிக் கிணறும், பறாளாய் வயல் வெளியில் 6 பரப்பு நெற் காணியும் விற்பனைக்கு உண்டு. (CS 54405) V-1

077 744 8080, 077 227 1327

**வீடு, காணி விற்பனைக்கு**

வியாபாரி மூலை புலோலி மேற்கு பருத்தித் துறையில் நிலப்பரப்பு 4 குளி 5 அளவுடைய காணி வீட்டுடன் (ஓடு போடப்பட்டு கட்டி முடிவடையாத நிலையில்) விற்பனைக்கு உள்ளது. பருத்தித்துறை Town இலிருந்து அண்ணளவாக 2 1/2 Km தூரத்தில் உள்ளது. உண்மையாக வாங்குவதற்கு ஆர்வமுடையவர்கள் தொடர்பு கொள்ளவும். நியாயமான விலை ( Market Price ) கவனத்தில் கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு: சிறி

தொலைபேசி : 074 154 6148
077 272 0595

மின்னஞ்சல் : abikumar65@gmail.com (28104) J-1

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

புலோலி பருத்தித்துறையில் உள்ள வீடொன்றில் வீட்டு வேலை செய்து பிள்ளைகளை பராமரிக்க 40-50 வயதுடைய பணிப்பெண் தேவை. (தங்கி இருக்க தேவை இல்லை) (CS/54391) J-1

தொடர்பு:- 077 459 7938

**மணமகள் தேவை**

புலோலி இந்து (V), 1988 மிருகசீரிடம் லண்டன் பிரஜை மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. பட்டதாரி / ஆங்கில மொழித் திறமையுடன் விரும்பத்தக்கது. (CR.20727) (N-1)

071 828 7793, 077 160 3060

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 17.02.2024 சனிக்கிழமை
இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் சேனாதிராஜா ஜெயேந்திரன் (காந்தன்)

(உரிமையாளர் - லிப்றா மரத்தளபாட நிலையம்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (16.03.2024) சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெற்றது. வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளை (18.03.2024) திங்கட் கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, அதனைத்தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் **ராஜா கிறீம் ஹவுஸ் (சரஸ்வதி) மண்டபத்தில்** நடைபெற உள்ள அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

77/61, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 367 7099

(cs 51371) (N.1)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 மின்னஞ்சல்: news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.03. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08


# சஞ்சீவி

Registered as a Newspaper

வாழ்க்கையே போர்க்களம்
வாழ்ந்துதான் பார்க்கணும்
போர்க்களம் மாறலாம்
போர்கள் தான் மாறுமா?

- வைரமுத்து

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2055 பங்குனி 04 ஞாயிற்றுக்கிழமை (17.03.2024) சிகரம் : 192



# சிவராத்திரியில் பொலிஸ் தாண்டவம்





சிவனுக்கும் கேட்கவில்லையா தமிழினத்தின் **கதறல்**

○ பா.குமுதன்

அன்றைக்கு அந்த இரவில் தென்நாடுடையசிவனுக்கும் கேட்காமல் போனது. மக்களின் அவலக்குரல்!

"கந்தறுந்து போனவங்களே...கடவுளைக் கும்பிடவும் உரிமையில்லையா...எங்களுக்கு..?"

"ஏன்..இப்பிடி வதைக்கிறியள்? இதென்னடாப்பா சோதனை...?"

"விகாரைக்குப் போய் இப்படிச்செய்வியளோ?"

"தமிழன் எண்டால் கிள்ளுக்கீரையாப்போச்சு..."

வெடுக்குநாறிமலையில் சிவராத்திரியன்று ஒலித்தகுரல்கள் இவை.

விடுதலைக்காகப் போராடி வீழ்த்தப்பட்ட ஓர் இனத்தின் வாழ்தலுக்கான போராட்டம் கடந்த சிவராத்திரிதினத்தில் வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் வெளிப்பட்டது.

லிங்கேஸ்வரரை வழிபடுவதற்குச் செல்லும் பொதுமக்களை எந்த அரச அதிகாரியும் தடுக்கக் கூடாது என்று வவுனியா நீதிமன்றம் கடந்த ஆண்டு உத்தரவிட்டிருந்தது. அதற்கேற்ப மகாசிவராத்திரி தின நிகழ்வுகளை அனுஷ்டிப்பதற்கு தயாரான மக்கள் பௌத்த பேரினவாதத்தால் மிருகத்தனமாகக் கையாளப்பட்டு, வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டு, நள்ளிரவு வேளையில், அடர்காட்டு வழியே அடித்து விரட்டப்பட்ட சம்பவம் இலங்கை ஒரு தோல்வியடைந்த நாடு என்பதை மீண்டும் புலப்படுத்தியது. சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறிமலையில் மக்களை சிங்கள - பௌத்த பேரினவாதம் எப்படி வேட்டையாடியது?

## வீதித்தடையை தகர்த்த மக்கள் எழுச்சி

08.03.2024

காலை 9 மணி.

வெடுக்குநாறிமலை நோக்கி மக்கள் நகரத்தொடங்கினர்.ஏற்கனவே பக்தர்களின் வருகை அதிகமாக இருக்கும் என்பதை உணர்ந்துகொண்ட பொலிஸார் ஒலுமடு பகுதியில் ஆலயத்துக்குச் செல்லும் பிரதானபாதையில் வீதித்தடையினை ஏற்படுத்தியிருந்தனர். அந்த வீதிக்குள் வசிப்பவர்கள் மாத்திரம் உள்ளே அனுமதிக்கப்பட்டனர்.ஏனையோர் செல்வதற்கு அனுமதியில்லை என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும் ஆலயவழிபாட்டில் ஈடுபடுவதற்காக பல்வேறு பகுதிகளில் இருந்தும் பொதுமக்கள் வருகைதர ஆரம்பித்தனர். சமநேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன்,கஜேந்திரன் மற்றும் வேலன்சுவாமிகள் ஆகியோரும் பொதுமக்களுடன்இணைந்துகொண்டனர்.அவர்களது முன்னேற்புடன் பொலிஸாரின் தடையினை மீறி மலைக்குச் செல்வதற்கான பயணம் தொடங்கியது. உள்ளே செல்லமுடியாதவாறு வீதித்தடையினை ஏற்படுத்திய பொலிஸார் மக்களின் எழுச்சி காரணமாகப் பின்வாங்கி பொதுமக்களை உள்ளேசெல்ல அனுமதித்தனர். இதன்போது குருந்தூர்மலையில் இருந்து வருகை தந்த இரு பிக்குகளின் தலைமையிலான குழு இந்த விடயங்களை கண்களில் குரோதம் பொங்க அவதானித்துக்கொண்டு நின்றது.அதிகரித்த மக்கள் அலை காரணமாக அந்தப் பிக்குகள்குழு ஆலயப்பகுதிக்குள் வருகைதரவில்லை. ஒதுங்கியேநின்றனர். ஒரு முறுகல் நிலையை உருவாக்கவே அந்தக் குழு வந்திருக்கிறது என்பதைத் தமிழ் மக்களும் புரிந்து கொண்டதால், அவர்களைக் காணாதது போல மலைக்குச் செல்லத்தொடங்கினர்.

"இவையள் ஒதுங்கிநிக்கினம் எண்டு பேசாமல் இருந்திராதையுங்கோ. உதுகளைக் கடவுளாக் கும்பிடுற கூட்டம்தான்(பொலிஸ்)உள்ளுக்க நிக்குது.இவங்கள் நினைச்சதை அவங்கள் செய்வாங்கள். எதுக்கும் எங்கட சனம் கொஞ்சம் விழிப்பா இருங்கோ என்று கிராமவாசி ஒருவர் எச்சரிக்கை செய்தார்.

## நீண்டதூர நடைபயணம்

ஆலயத்துக்குச் செல்வதற்கு வாகனங்களுக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தது. இதனால் பொதுமக்கள் சுமார் 6 கிலோமீற்றர் தூரம் கொண்ட காட்டுப்பாதையூடாக நடந்து ஆலயத்தினை அடைந்தனர். அவர்களது பயணம் முட்களால் நிரம்பியிருந்தது. இருப்பினும் சிவனை அடைந்துவிட்டோம் என்றபூரிப்பில் புளகாங்கிதமடைந்தனர். ஆலயத்தின் பூசாரியார் முதல்நாளே கைதுசெய்யப்பட்டமையால் மாலை 4 மணிவரை பூஜைகள் எவையும் இடம்பெறவில்லை. மக்கள் சுயவழிபாட்டில் ஈடுபட்டனர். பூசாரியார் நீதிவானால் விடுவிக்கப்பட்டு, மாலை 5மணிக்கு ஆலயத்தினை அடைந்ததும் முதலாவது பூஜை இடம்பெற்றது. அதுவரை சுமார் 500 வரையான பொதுமக்கள் ஆலயத்தில் குழுமியிருந்தனர். அந்த வளாகத்தினைச் சுற்றி, பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டிருந்தது.

## குடிக்க நீரின்றித் தவித்த குழந்தைகள்

ஆலயத்துக்கு தண்ணீரைக் கூட எடுத்து செல்ல அனுமதிக்கமாட்டோம் என பொலிஸார் பிடிவாதம் பிடித்தனர்.இதனால் கடும் வெயிலில் நடந்துசென்ற பொதுமக்கள் நீரின்றி தாகத்தால் தவித்தனர். இதனால் குழந்தைகளும், பெண்களும் கடும் அந்தரிப்புக்குள்ளாகினர். ஒருகட்டத்தில் ஆத்திரமடைந்த பெண்கள், கடமையில் இருந்த பொலிஸ் அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

"தண்ணி குடிக்கிறதுக்கும் இந்த நாட்டில உரிமையில்லையோ? .நாடு பிச்சை எடுத்தாலும் இந்த இறுமாப்புக்கு மாத்திரம் குறைச்சல் இல்ல.

## பூட்ஸ் கால்களால் நசுக்கப்பட்ட பூசை



மாலைதீவிட்ட பிச்சை எடுத்தாலும் சிங்களவன் மாறமாட்டான்" என்று தமக்குள் ஆதங்கப்பட்டனர். "இதெல்லாம் எங்களுக்கென்ன புதுசோ? நாங்க முள்ளிவாய்க்கால் கஞ்சி குடிச்ச ஆக்கள் . இவங்கள் தண்ணீ தராட்டி செத்தா போயிருவம்? வழி இருக்கு வாங்கோ" எனக்கூறி ஒன்று சேர்ந்த இளை

06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ‘பார்க்க ஆசையா இருக்கு எண்டாலும் மனதில ஒரு கவலை இருக்கு’

○ நிலாந்தன்



## யூரியூப்பர்களின் காலத்தில் தேசமாகச் சிந்திப்பது

கடந்த ஒன்பதாந் திகதி வெடுக்குநாறிமலையில் சிவ பூசைக்குள் பொலிஸ் புகுந்தது. எட்டுப் பேர் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் சிறை வைக்கப்பட்ட அடுத்த நாள், 10ஆம் திகதி யாழ்ப்பாணம் முற்றவெளியில் விமானப் படைக் கண்காட்சியின் கடைசி நாளன்று, ஆயிரக்கணக்கான மக்கள் அங்கே திரண்டார்கள்.

அங்கு திரண்ட சனத்தொகை சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்வில் திரண்ட தொகைக்குக் கிட்ட வரும் என்று கூறப்பட்டாலும், அது ஒரு மிகை மதிப்பீடு என்று கருதப்படுகின்றது. எனினும் ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டார்கள் என்பது மட்டும் உண்மை. தமது மரபுரிமைச் சொத்து ஒன்று ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிராகவும், தமது வழிபாட்டுரிமையை நிலை நிறுத்துவதற்காகவும் வெடுக்குநாறி மலையில் போராடிக் கொண்டிருக்கும் அதே மக்கள் மத்தியில் இருந்துதான் முற்றவெளிக்கும் ஆட்கள் போனார்கள். இந்த முரண்பாட்டை எப்படி விளங்கிக் கொள்வது?

வெடுக்குநாறிமலைக் கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நல்லூரில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பேசிய தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர், முற்றவெளிக்குப் போன மக்களைக் கடுமையாக விமர்சித்தார். 15 ஆண்டுகளுக்கு முன் நடந்தவற்றை மறந்து முற்றவெளிக்குப் போன மக்கள் மீது அவருக்குக் கோபம். அந்தக் கோபம் நியாயமானது. ஆனால் அதைவிட ஆழமான, நியாயமான ஒரு கேள்வி உண்டு. அது என்னவெனில், தமது சொந்த அரசியலின் மீதும் நேரடியான மற்றும் மறைமுக ஒடுக்குமுறைகளின் மீதும் தமிழ் மக்களின் உணர்திறனை, விழிப்பை அதிகப்படுத்தும் நிகழ்ச்சி நிரல் எந்தக் கட்சியிடம் உண்டு?

ஒரு மக்கள் கூட்டத்தின் பொதுப்புத்தி அப்படித்தான் இருக்கும். அது வாழ்க்கையைக் கொண்டாடக் கிடைக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களையும் தேடிப் போகும். மக்களுக்கு பொழுது போகவேண்டும். அதுதான் அவர்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் பண்ணை வெளிக்கு வருகிறார்கள். யாழ்ப்பாணத்தின் ஏனைய உல்லாசத் தலங்களுக்குப் போகின்றார்கள். வசதி குறைந்தவர்கள் பண்ணைக்கும் ஏனைய சிறு பூங்காக்களுக்கும் போகின்றார்கள். வசதி கூடியவர்கள் யாழ்ப்பாணத்தின் நட்சத்திர அந்தஸ்துடைய விருந்தினர் விடுதிகளுக்கு போகின்றார்கள். புலம்பெயர்ந்த தமிழர்கள் முன்பு வரும்பொழுது தங்கள் சொந்தக்காரர்களின் வீடுகளில் தங்குவதுண்டு. இப்பொழுது கணிசமானவர்கள் விருந்தினர் விடுதிகளில் தங்குகிறார்கள். அதற்காக லட்சக்கணக்கில் செலவழிக்கின்றார்கள்.

அதாவது சமூகத்தின் வெவ்வேறு மட்டங்களில் இருப்பவர்கள் தங்கள் தங்கள் நிதித் தகைமைக்கு ஏற்ப வாழ்க்கையைக் கொண்டாட விரும்புகிறார்கள். குறிப்பாக ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை வாழ்க்கையைக் கொண்டாட விரும்பும் அநேகருக்கு புலம்பெயர்ந்த தமிழர்கள்தான் ஒரு முன்னுதாரணம். மூன்றாவது புலப்பெயர்ச்சி அலைக்கு அது பிரதான காரணம்.

இப்படியாக வாழ்க்கையைக் கொண்டாட ஆசைப்படும் ஒரு மக்கள் கூட்டத்தை அவர்களுடைய சொந்த அரசியலின் மீது உணர்திறன் மிக்கவர்களாக மாற்றுவது எப்படி? அதை யார் செய்வது?

விமானப்படைக் கண்காட்சிக்கு வந்த ஒரு நோர்வேத் தமிழர் கூறுகிறார் “பார்க்க ஆசையா இருக்கு, எண்டாலும் ஒரு கவலை இருக்கு மனதில” என்று. ஆசையாக இருக்கிறது என்பது வாழ்க்கையை கொண்டாட ஆசையாக இருக்கிறது என்று பொருள். கவலை இருக்கிறது என்பது இறந்த காலத்தில் தமிழர்கள் பட்ட துயரங்களை நினைக்கும் போது ஏற்படுவது.

ஆனால் அது இறந்த காலமல்ல, நிகழ்காலமுந்தான். அதனால்தான் வெடுக்குநாறிமலையில் போராட வேண்டியிருக்கிறது; மயிலத்தமடுவில், மாதனையில் போராட வேண்டியிருக்கிறது; காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அன்னையர்கள் தொடர்ந்து போராட வேண்டியிருக்கிறது. போர் ஒரு விளைவு மட்டுமே, மூல காரணம் அல்ல. ஒடுக்கு முறைதான் மூல காரணம். அது இப்பொழுதும் உண்டு.

எட்டுப் பேர் கைது செய்யப்பட்டிருக்கும் ஒரு சமூகத்தில் இருந்து ஆயிரக்கணக்கானவர்கள் முற்றவெளிக்குப் போயிருக்கிறார்கள். அங்கே படையினர் பரசூட்டில் இறங்குவதைப் பார்த்து ஆர்ப்பரிக்கிறார்கள். உலங்கு வானூர்தியில் ஏறுவதற்காக முண்டியடிக்கிறார்கள். அதைப் பெரும்பாலான யூரியூப்பர்கள் கவர்ச்சியாக விற்கிறார்கள். இது யூடியூப்பர்கள் காலம். வாசிப்பதற்கான பொறுமை குறைந்து வருகின்றது. கேட்பதற்கான தாகம் அதிகரித்து வரும் ஓர் ஊடகச் சூழல். யூடியூப்பர்கள் எத்தனைபேர் தேசத்தைக் கட்டியெழுப்பும் பொறுப்புணர்ச்சியோடு செயற்படுகிறார்கள்? தான் பரப்புவது வதந்தியா செய்தியா என்று எத்தனை யூடியூப்பர்களுக்குத் தெரியும்? எத்தனை யூடியூப்பர்கள் தமிழுக்கு வெளியே போய் வாசிக்கின்றார்கள்? எத்தனை யூடியூப்பர்கள் தாங்கள் வெளியிடும் தகவலின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துகிறார்கள்? இதை இன்னும் கூர்மையாகக் கேட்டால் ஒரு யூடியூப்பருக்கு என்ன தகைமை இருக்க வேண்டும்? ஒரு நல்ல கமராவும் வேகமான இன்டர்நெற்றும் இருந்தால் மட்டும் போதுமா? தாங்கள் கூறும் விடயத்தின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தவேண்டும் என்ற பொறுப்புணர்வு எத்தனை யூடியூப்பர்களுக்கு உண்டு?

கடந்த சுதந்திரதினத்தன்று, ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். அவருடைய வருகைக்கு எதிராக கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் பழைய பூங்கா வீதியில் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அவர்களைத் தடுத்து நிறுத்த வீதியின் குறுக்கே பொலிஸ் ஒரு பேருந்தை நிறுத்தி வைத்திருந்தது. அவ்வாறு பழைய பூங்கா வீதி முன்னறிவிப்பின்றி மூடப்பட்டதை எதிர்த்து அந்த வீதி வழியாக காரில் வந்த ஒருவர் பொலிஸாரோடு முரண்படுகிறார். அது தொடர்பாக ஒரு யூடியூப்பர் செய்தி வெளியிடுகையில் “காரில் வந்த இந்தியர், பார்த்து மிரண்ட இலங்கை பொலிஸ்” என்று தலைப்பிடுகிறார். அந்தக்காணொலி ஆறு இலட்சத்து எட்டாயிரம் பேர்களால் பார்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் பொலிஸாரைக் கேள்வி கேட்கும் நபர் ஓர் இந்தியர் அல்லர். சுயாதீன திருச்சபை ஒன்றின் பாஸ்டர். அவருடைய காரின் “டாஷ் போர்ட்” பகுதியில் இந்திய தேசியக்கொடி காணப்படுகின்றது. அதை வைத்து அவர் ஓர் இந்தியர் என்று யூடியூப்பர் கூறுகிறார். ஆயின், ஆறு இலட்சத்துக்கும் அதிகமானவர்களிடம் அந்தப் பொய் சென்று சேர்ந்திருக்கின்றதா?

இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட பொழுது ஓர் இந்திய யூடியூப்பர் கூறினார், ‘வெள்ளைக்காரர்கள் வாங்கி வைத்திருக்கும் பாணை உள்ளூர் மக்கள் பறித்துக் கொண்டு ஓடுவதாக’ அது ஒரு பொய்.

பெரும்பாலான யூரியூப்பர்கள் தமது காணொலிகளைப் பார்ப்பவர்களின் தொகையை எப்படிக் கூட்டுவது என்று தான் சிந்திக்கிறார்கள். பார்ப்பவர்களின் தொகை கூடக்கூட வருமானம் பெருகும். எனவே பெரும்பாலானவர்கள் உழைப்பை எப்படிப் பெருக்குவது என்றுதான் சிந்திக்கின்றார்கள். இது ஓர் ஆபத்தான வளர்ச்சி. யூடியூப்பர்களின் காலத்தில் உண்மை எது? பொய் எது? ஊடக அறம் எது? உழைப்பு மட்டும்தான் யூடியுப் தர்மமா? சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு, தேசத்தைக் கட்டியெழுப்பவேண்டிய பொறுப்பு யூடியூப்பர்களுக்கு இல்லையா? வாசகரை அல்லது பார்வையாளரை விமர்சனபூர்வமாகச் சிந்திக்கும் விழிப்புடைய பிரஜைகள் ஆக்குவதே தேசத்தைக் கட்டியெழுப்பும் ஊடகவியலாளரின் வேலை. எனவே யூடியூப்பர்களின் காலத்தில் தேசத்தைக் கட்டியெழுப்புவது எத்தனை சவால்கள் மிக்கது என்பதனை விமானப்படைக் கண்காட்சி தொடர்பாக வெளிவந்த பெரும்பாலான யூடியூப்கள் மீண்டும் நிரூபித்தன. இது அரசியல் கட்சிகள் மற்றும் செயற்பாட்டாளர்களின் பணி மேலும் கடினமாக்கப்படுகிறது என்பதைக் காட்டுகிறது.

இப்படிப்பட்டதோர் ஊடகச் சூழலில், முற்றவெளியில் திரளும் மக்களைத் திட்டித் தீர்ப்பதனால் தேசத்தைக் கட்டியெழுப்ப முடியாது. தமது சொந்த அரசியலின் மீது அந்த மக்களை எப்படி உணர்திறன் மிக்கவர்களாக மாற்றுவது என்று கட்சிகள் சிந்திக்கவேண்டும். அதற்கு வேண்டிய வழிவகைகளைக் கண்டுபிடிக்கவேண்டும். தேசியவாத அரசியல் என்பது மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவது. தேசத்தைக் கட்டியெழுப்பும் கலையை; பண்பாட்டை; அறிவியலை; தேசத்தைக் கட்டியெழுப்பும் யூடியூப்பர்களை; தேசத்தைக் கட்டியெழுப்பும் ஊடகக் கலாசாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

இப்படி எழுதுவதுகூட சமூகத்தின் ஒரு பிரிவினருக்கு எரிச்சலூட்டுவதாக இருக்கலாம். ஏனென்றால் வான் படைக் கண்காட்சி தொடர்பாக படித்தவர்கள் சிலர் தெரிவித்த கருத்துகளில் அதைக் காணமுடிந்தது. எல்லா பிரச்சினைகளும் முடிந்து விட்டன; நாங்கள் இப்பொழுது சந்தோஷமாகத்தான் இருக்கிறோம்; கண்டதையும் எழுதிக் குழப்பாதீர்கள்; மக்கள் சந்தோஷமாக இருக்க விரும்புகி றார்கள்; அவர்களை மீண்டும் பலியாடுகள் ஆக்காதீர்கள்… என்று கூறும் ஒரு போக்கு அதிகரித்து வருகிறது. மக்களைத் தமது நிகழ்காலத்தின் மீது உணர்திறண் மிக்கவர்களாக மாற்ற முற்படும் எழுத்துகளுக்கு வாசிப்பும் வரவேற்பும் குறைந்து வருகிறது. பதிலாக மாயைகளின் மீதும் பொருளற்ற மகிழ்ச்சியின் மீதும் பொய்களின் மீதும் கட்டுக் கதைகளின் மீதும் தாகம் கொள்ளச் செய்யும் ஊடக கலாசாரம் மேலெழத் தொடங்கிவிட்டது. வெறுப்பர்கள் haters எல்லாவற்றையும் எதிர்மறையாக விமர்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.



சில மாத கால இடைவெளிக்குள் யாழ்ப்பாணம் முற்றவெளியில் மக்கள் பெருந்திரளாகக் கூடிய நிகழ்வுகளிலிருந்து தமிழ் அரசியல்வாதிகளும் செயற்பாட்டாளர்களும் குடிமக்கள் சமூகமும் புத்திஜீவிகளும் கலைஞர்களும் ஊடகங்களும் கற்றுக்கொள்ள வேண்டும். ஆழமான வாசிப்புக் குறைந்து, ஆழமான யோசிப்பும் குறைந்து, மேலோட்டமானவைகளை நோக்கி மொய்க்கும் ஒரு ஜன சமுத்திரத்தை புதிய ஊடக மரபு உற்பத்தி செய்து வருகிறது. செயற்கை நுண்ணறிவின் புதிய வளர்ச்சிகளின் பின்னணியில் டீப் ஃபேக் deepfake என்று அழைக்கப்படும் ஆழமான போலி உருவாக்கப்படுகின்றது. அது ஒரு வெகுசனப் பண்பாடாக வளர்க்கப்படுகிறது. ஆழமான பொய்களின் மத்தியில்;மறதி அதிகமுடைய ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியில் தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# ஊர்ப்புதினம்

பாகம் 2

31



○ இராகவன்

இனித்தொடர்ந்து கொஞ்சக் கிழமை நவண்ணாவைப் பற்றித்தான் பாக்கப்போறம். அவையின்ர வீட்டுக்கும் எங்கட வீட்டுக்குமிடையில அப்ப ஒரு வெட்டையிருந்தது. முதல்ல அவங்கட வீடு ஒரு மண்வீடாயிருந்தது. அப்ப நான் நல்ல சின்னப்பொடியன். அஞ்சாறு வயதிருக்கும். எங்கட வீட்டுக்கு வந்து திரும்புற சந்தியோடதான் அவையின்ர வீடு. நான் அம்மாவோடையோ அல்லாட்டில் அண்ணாக்களோடையோ கூட்டிக் கொண்டு எங்கையெனும் போய்வரேக்குள்ள நவண்ணா வேலியால எட்டிப்பாத்து என்னை "உஸ்....உஸ்" எண்டு கூப்பிடுவான். எனக்குச் சரியான வெக்கமாயிருக்கும். நான் தலையக்குனிஞ்சு கொண்டுதான் போய்வருவன். அவங்கட வீட்டுத்தாவாரத்தில ஒரு நாய் கட்டி நிக்கும். அதுக்குப் பக்கத்தில ஒரு அம்மியிருக்கும்.

அந்த அம்மியில ஏறி நாய் நிக்கும். ஆக்களைக் கண்டாலென்ன, காணாட்டிலென்ன அந்த நாய் ஒரு வித்தியாசமான சத்தத்தில எப்பவும் குலைச்சுக் கொண்டிருக்கும். அதுக்கு "பப்பி" எண்டு பெயர். உங்களுக்கு ஞாபகம் இருக்கோ தெரியாது. ஊர்ப்புதினம் முதலாம் பாகத்தில் ஒரு சப்றில 1987 ஒபறேசன் லிபறேசன் நேரத்தில எங்கட வீட்டு முத்தத்தில படுத்திருந்த நாயொண்டு பதிஞ்சு வந்த ஹெலிக்கொப்ரறைத் துரத்திக் குலைச்சுக்கொண்டு போனதெண்டு சொல்லியிருக்கிறன். அந்த நாய் தான் இந்த "பப்பி" ம்....சரி விசயத்துக்கு வருவம். சிலநேரம் நான் எங்கட வீட்டுக்கால வெளிக்கிட்டுத்தனியாப்போனன் எண்டால் நவண்ணா என்னை கண்டுட்டு "பப்பி! விடாதை! விடாதை! உவனைக்கடி!" எண்டு குரல் வைப்பான். எனக்கு ஒரே கெடிக்கலக்கமாயிருக்கும். நான் தலைதெறிக்க வீட்டையோடி வந்திடுவன்.

அப்ப நவண்ணா வீட்டாரும் எங்கட வீட்டாரும் பெருசா நெருக்கமில்ல. நவண்ணா இரணைப்பிள்ளையில ஒராள். மற்றாள் செல்வரத்தினம். நாங்கள் அவரை செல்வண்ணா எண்டு கூப்பிடுவம். அந்தண்ணா நவண்ணா மாதிரி என்னோட தனகுறேல்ல. தானும் தன்பாடுமாதிரியும். அப்ப ரெண்டு பேரும் ஏ.எல்.படிச்சுக்கொண்டிருந்தவையெண்டு நினைக்கிறன். என்ர அண்ணாக்களும் அப்ப ஏ.எல். தான் படிச்சுக்கொண்டிருந்தவை.

(தொடரும்)

# புலிகளுக்கு உதவினாரா கடற்படை இயந்திரவியலாளர்?

○ கே.வி.தவராசா

**நவாப்தீன் வழக்கில் நடந்த திருப்பங்கள்**

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

### ஐந்து குற்றச்சாட்டுகள்

சட்டமா அதிபரால் நவாப்தீனுக்கு எதிராக ஒரு குற்றஒப்புதல் வாக்குமூலத்தைப் பிரதான சாட்சியமாகக் கொண்டு தனித் தனியாக ஐந்து குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட தனித்தனியான ஐந்து குற்றச்சாட்டுப் பத்திரங்கள் மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. ஆனால் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்ற வியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் பிரிவு 174(1)ல் ஆளொருவர் ஒன்றுக்கும் மேற்பட்ட ஒரே வகையினவான தவறுகளை அத்தகைய தவறுகளில் முதலாம் தவறிலிருந்து கடைசித் தவறுவரையில் எத்தனை தவறுகளையும் ஓராண்டுகால இடைவெளிக்குள் புரிந்தாரெனக் குற்றம் சாட்டப்படும்பொழுது, ஒரே குற்றப்பகர்வில் குற்றச்சாட்டுகள் அனைத்தையும் சட்டமா அதிபரினால் மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய சட்டத்தில் இடமுண்டு என மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பிரிவு 175 (1) ஒரே செயற்கோவையாக அமையும் பல செயல்களைக் கொண்ட ஒரு தொடர் வரிசையில் ஒரே ஆளினால் ஒன்றுக்கு மேற்பட்ட குற்றங்கள் புரியப்பட்டிருப்பின் அத்தகைய குற்றம் ஒவ்வொன்றுக்குமாக அவர் குற்றஞ்சாட்டப்பட்டு ஒரே விளக்கத்தில் விளங்கப்படலாம் என்பதுடன் மேல்நீதிமன்றத்தின் முன்னரான விளக்கங்களில் அத்தகைய குற்றச்சாட்டுகள் ஒரே குற்றப் பகர்வில் உள்ளடக்கப்படலாம் என்றும் சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல் கைதிகளுக்கு எதிராக ஒரே தன்மையைக் கொண்ட பல குற்றச்சாட்டுகள் இருப்பின் அத்தகைய குற்றச்சாட்டுகள் எத்தனையாக இருந்தாலும் மேல்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படுகையில் ஒரு வருட காலத்துக்குள் நடைபெற்ற குற்றங்களாயின் ஒரே குற்றச்சாட்டுப் பத்திரத்தில் உள்ளடக்கமுடியும். ஆனால் ஐந்து குற்றச்சாட்டுப் பத்திரங்களும் நவாப்தீனுக்கு எதிராக தனித் தனிக் குற்றச்சாட்டுகளாக சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டமையால் தனித் தனியாக ஒவ்வொரு வழக்கும் வாதாடவேண்டிய சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இதே தன்மை கொண்ட வழக்குகள் பலவற்றுக்கு அரசியல் கைதிகள் முகம் கொடுக்கவேண்டியுள்ளது. சில அரசியல் கைதிகளுக்கு ஒரு குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் ஆறு தனித்தனி வழக்குகள் தாக்கல் செய்யப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. இதனால் ஒரு வழக்கிலிருந்து விடுதலையானாலும் கூட மற்றைய வழக்குகள் முடிவடையும்வரை சிறையில் தொடர்ந்து அடைபட்டுக் கிடக்க வேண்டியுள்ளதுதான். அரசியல் கைதிகள் நீண்டகாலம் சட்டத்தின்படி கிடைக்கவேண்டிய நீதி கிடைக்காமல் தொடர்ந்தும் சிறையில் தடுத்து வைக்கப்படுவதற்கு இதுவும் ஒரு முக்கியமான காரணமாக அமைகின்றது.

அரச தரப்பில் நவாப்தீன் கொடுத்ததாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மற்றைய நான்கு வழக்குகளிலும் சாட்சியமாக பாவிக்கப்பட முடியாத நிலையில் புலிகளுக்கும், நவாப்தீனுக்கும் இடையே



நடைபெற்றதாகக் கூறப்படும் உரையாடல்களை அடங்கிய ஒலிபரப்பு நாடாக்களை நவாப்தீனுக்கு எதிராக முக்கியமான சாட்சியாக பாவிக்க அரசுதரப்பு முடிவு செய்தது.

### ஒலிபரப்பு நாடாக்கள்

ஏற்கனவே நடந்துமுடிந்த வழக்கில் ஒலிநாடாக்களைச் சாட்சியமாகப் பாவிக்க எண்ணிய நிலையில், நான் முன்வைத்த பூர்வாங்க ஆட்சேபனையையடுத்து அரச தரப்புக்கு நீதிமன்றம் அதனைச் சாட்சியாகப் பாவிப்பதற்கு அனுமதியளிக்கவில்லை. இப்பொழுது மற்றைய நான்கு வழக்குகளில் அந்த ஒலிபரப்பு நாடாவைப் பாவிப்பதற்கு 45 நாள்கள் அறிவித்தல் எதிரி தரப்புக்குக் கொடுக்கப்பட்டதுடன் விசாரணைத் திகதியும் குறிப்பிடப்பட்டது.

இந்த வழக்கில் முக்கியமான விடயம் யாதெனில் அடுத்த தவணையில் சாட்சிப் பொருள்களாக குற்றப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் மூன்று ஒலிப்பதிவு நாடாக்கள் திறம்படச் செயற்படுகின்றதா எனத் திறந்த நீதிமன்றத்தில் பரீட்சித்துப் பார்க்க திகதி குறிப்பிடப்பட்டது.


இந்தக் குறிப்பிடப்பட்ட மூன்று ஒலிப்பதிவு நாடாக்களும் சரியான முறையில் செயற்படுமாயின் நவாப்தீனுக்கு எதிரான மற்றைய வழக்குகளையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளச் சாத்தியம் உண்டு. 12 வருடம் பழமை வாய்ந்த மூன்று ஒலிப்பதிவு நாடாக்களும் செயலிழந்திருந்தால் நவாப்தீன் மற்றைய எல்லா வழக்குகளிலிருந்தும் விடுதலையாகச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். ஆனால் நம்ப முடியாததும் ஆச்சரியமானதுமான விடயம் யாதெனில் மூன்று ஒலிப்பதிவு நாடாக்களும் நீதிமன்றில் பரீட்சித்துப் பார்கையில் திறம்படச் செயற்பட்டன. ஆனால் அவை தெளிவற்றுக் காணப்பட்டன. ஆதலால் சிறிது காலத்தில் அரச தரப்பு இந்த வழக்கைத் தொடர்ந்தும் நடத்திச்செல்ல முடியாதென நீதி மன்றுக்கு அறிவித்ததும் நவாப்தீன் சகல வழக்குகளிலிருந்தும் முழுமையாக விடுதலை பெற்றார்.

மனநோயாளியான தனது உடன் பிறந்த தங்கையை கடற்படையினர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதால் தான், கடற்படைத் தகவல்களை விடுதலைப்புலிகளுக்கு வழங்கியதாக குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் மிகத் தெளிவாக நவாப்தீன் குறிப்பிட்டிருந்தார்.

இருந்தபோதிலும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாகப் பெறப்படவில்லை என நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டதாலும், அரசுதரப்பினரால் முக்கியமான சான்றாக முன்வைக்கப்பட்ட ஒலிப்பதிவு நாடாக்களின் தெளிவின்மையாலும் நவாப்தீனின் விடுதலை சாத்தியமானது.

*(அடுத்த வழக்கு அடுத்த வாரம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைக்குள் தமிழ்த்தேசியம்

## வரலாறும் அதன் பயணப்பாடும்

பிரஜீவன் ராம்

### காந்திய வழியில் செல்வநாயகம்

தீவிர சிங்கள - பௌத்த தேசியவாதிகளின் ஆதரவுடன் தனிச்சிங்களச் சட்டம் தொடர்பான விவாதம் நாடாளுமன்றில் நடந்து கொண்டிருந்த வேளையில், தனிச்சிங்களச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் செல்வநாயகம் தலைமையில் தமிழ்த் தேசியவாதிகளால் காலிமுகத்திடலில் அகிம்சை வழியில் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. பிரித்தானியரை எதிர்த்து அகிம்சை வழியில் போராடிய காந்தியைப்போல, இலங்கைத்தீவில் தமிழரின் உரிமையை சிங்கள - பௌத்த தேசியவாதிகளிடம் இருந்து அகிம்சை வழியில் போராடிப் பெற்றுக்கொள்ளலாம் என செல்வநாயகம் தலைமையிலான தமிழரசுக் கட்சியினர் அன்று சிந்தித்திருக்கலாம். ஆனால், தமிழின அழிவின் மூலமே சிங்கள இருப்பைப் பாதுகாக்கலாம் என்ற கருத்தியலை கொண்ட தீவிர சிங்கள - பௌத்த தேசியவாதிகளின் முன்னால் அகிம்சைப் போராட்டம் வெற்றிபெறுமா?

சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்கு பற்றிய தமிழர்கள் மீது திட்டமிட்டு சிங்களக் காடையர்கள் தாக்குதல் நடத்தினார்கள். அந்தத் தாக்குதலில் சத்தியாக்கிரகப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கிய எஸ்.ஜே.வி.செல்வநாயகம் உட்பட்ட தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள், சாதாரண பொது மக்கள் எனப் பலரும் காயமடைந்தனர். இலங்கை அரசியல் வரலாற்றில் சிங்கள அரசுக்கு எதிராக ஈழத்தமிழரால் முன்னெடுக்கப்பட்ட முதலாவது அகிம்சை வழியிலான உரிமைப் போராட்டம், தீவிர சிங்கள - பௌத்த தேசியவாதிகளால் திட்டமிட்டுச் சிதைக்கப்பட்டது. குறிப்பாக, தமிழர்கள் சிங்களக் காடையர்களால் தாக்கப்படுவதை அன்று நாடாளுமன்ற மேல் தட்டில் நின்று வேடிக்கை பார்த்து 'அவர்கள் அதை அனுபவிக்கட்டும்' ('let them have the tast of it') என கேலி செய்து மகிழ்ந்தார் பண்டாரநாயக்கா சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டு தாக்கப்பட்ட தமிழர்களை தமிழ்க்காங்கிரஸ் தலைவரான ஜீ.ஜீ.பொன்னம்பலம், எஸ்.தொண்டமான், சேர்.கந்தையா வைத்தியநாதன், ஏ.அசீஸ், சென்.யோசப் கல்லூரி அதிபர் வண.பீற்றர் பிள்ளை, வண.தனிநாயகம் உட்படப் பல பிரமுகர்கள் சந்தித்து ஆறுதல் கூறினார்கள். அன்று தமிழ் அரசியல்வாதிகள் மத்தியில் கருத்தியல் ரீதியாக வேறுபாடு இருந்தாலும் தமிழின இருப்பைப் பாதுகாக்க வேண்டும் என்ற தூய எண்ணம் இருந்தது, ஒரு தமிழனுக்கு அநீதி இழைக்கப்பட்டாலும் அனைவரும் ஒன்றிணைந்து அதை எதிர்க்கவேண்டும் என்ற சிந்தனை இருந்தது என்பதையே இந்த அரசியலில் பிரமுகர்களின் ஒன்றிணைவு வெளிப்படுத்துகின்றது. காலிமுகத்திடலில் தொடங்கிய வன்முறைகள் கொழும்பு நகரெங்கும் பரவியது. ஆங்காங்கே பல தமிழ்மக்கள் சிங்கள இனவாதிகளால் தாக்கப்பட்டதோடு தமிழர்களின் வர்த்தக நிலையங்கள் பலவும் இவர்களால் கொள்ளையிடப்பட்டன. இறுதியில் சிங்களத் தேசியவாதிகளின் நோக்கம் நிறைவேறியது.

### நிறைவேற்றப்பட்ட தனிச்சிங்களச்சட்டம்

1956 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 5ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தனிச்சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. தனிச் சிங்களச் சட்டத்துக்கு எதிராக தமிழரசுக் கட்சியினர் திருமலை யாத்திரை மேற்கொண்டதுடன் இனப்பிரச்சினையைத் தீர்க்க ஒரு வருட கால அவகாசத்தை சிங்கள அரசுக்கு கொடுப்பதாகவும் அது தவறின் தாம் நேரடி யுத்தத்தில் ஈடுபடப் போவதாகவும் அறிவித்தனர்.

ஒரு வருடகால அவகாசம் முடிவுறும் காலத்தில் பண்டாரநாயக்கா - எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துடன் ஓர் ஒப்பந்தத்தை மேற்கொள்ள உடன்பட்டார். இலங்கைத்தீவின் அரசியல் வரலாற்றில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முதல் அடியாக வர்ணிக்கப்படும் பண்டா-செல்வா ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதை அமிர்தலிங்கம் உள்ளிட தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் எதிர்த்தபோது, தந்தை செல்வநாயகம் அவர்களுக்கு கூறிய பதில், 'இந்த ஒப்பந்தத்தின் மூலம் சமஷ்டி ஆட்சியமைப்புக்கான அடிப்படையை உருவாக்கி உள்ளோம், அது மட்டுமல்லாது வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தாயகம், சிங்கள அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது' என்பதாகவே அமைந்திருந்தது.

மறுபுறம் பண்டா - செல்வா ஒப்பந்தத்துக்கு எதிராக ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில், ஐக்கிய தேசியக் கட்சியினரால் கண்டி யாத்திரை மேற்கொள்ளப்பட்டது. இந்த யாத்திரையின்போது 'தமிழர்கள் தனி நாடு அமைப்பதற்கான முதலடியே' பண்டா-செல்வா ஒப்பந்தம் எனச் சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரம் செய்தனர். இலங்கை இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான முதல் அடி என வர்ணிக்கப்பட்ட இந்த ஒப்பந்தத்தை தமிழர்கள் தனிநாடு அமைப்பதற்கான முதலடி எனக் கூறிய ஐக்கிய தேசியக் கட்சியினர் 'முதலடி' என்ற நூலை வெளியிட்டு சிங்கள மக்கள் மத்தியில் மீண்டும் தீவிர சிங்கள - பௌத்த தேசியவாத உணர்வு வலுப்பட வழிவகுத்தனர்.

### கிழித்தெறியப்பட்ட 'முதல் அடி'

சிங்கள அரசியல் தலைமைகள் மட்டுமன்றி பௌத்த பிக்குகளும் இந்த ஒப்பந்தத்துக்கு எதிராக குரல் கொடுத்தமையால் வேறு வழியின்றி பண்டா - செல்வா ஒப்பந்தத்தை பண்டாரநாயக்கா கிழித்தெறிந்தார். அன்று தொடக்கம் இன்றுவரை ஈழத்தமிழரின் அரசியல் உரிமைப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான எல்லா முயற்சிகளும், ஒப்பந்தங்களும் சிங்களத் தேசியவாத அரசியல்வாதிகளாலும் பௌத்த பிக்குகளாலும் திட்டமிட்டு தோற்கடிக்கப் பட்டுக்கொண்டே இருக்கின்றன.



1955 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் தனிச்சிங்களச் சட்டத்துக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கருத்துக் கூறிய என்.எம்.பெரேரா, "தனிச்சிங்களச் சட்டம் என்பது இலங்கையர் தேசத்தை உருவாக்காது, மாறாக சிங்களவர் தேசத்தையே உருவாக்கும். நாங்கள் தமிழரை நிர்ப்பந்திக்காவிட்டால் தனிநாடு கோரவேண்டிய தேவை அவர்களுக்கு எழாது. தனிச்சிங்களச் சட்டத்தின் மூலம் தமிழர் இந்தியாவை நாட வேண்டிய சூழ்நிலை உருவாகும் அல்லது ஏகாதிபத்திய நாடுகள் இலங்கை இனப்பிரச்சினையை தமது நலனுக்காகப் பயன்படுத்தும் சூழ்நிலை உருவாக்கப்படும்" என எச்சரித்தார். அவர் அன்று கூறிய அனைத்தும் பின்னாளில் வரலாறானது. இதில் இருந்து நாம் ஒரு புரிதலை பெற்றுக்கொள்ளலாம், அதாவது, தமிழர்கள் மத்தியில் தனிநாட்டுக் கோரிக்கை வலுப்படுவதற்கும், தமிழ் மக்கள் ஆயுத போராட்டத்தை தேர்வு செய்வதற்கும் தனிச்சிங்களச் சட்டமே அடித்தளம் அமைத்து கொடுத்தது என்பதே அது

(தொடரும்)

# கூட்டணிகள் பலவிதம்; ஒவ்வொன்றும் ஒருவிதம்!!

மயூ

இந்தியப் பொதுத்தேர்தல் களம் சூடு பிடித்துள்ளது. தமிழகத்தில் அரசியல் கட்சிகள் கூட்டணிப் பேச்சுகளில் தீவிரமாகியுள்ளன. நாடாளுமன்றத் தேர்தலுக்கான திகதி இன்னமும் அறிவிக்கப்படாதபோதும் தேர்தல் களம் பரபரப்பான சூழலை அடைந்திருக்கின்றது. யார், யாருடன் கூட்டணி என்ற பேச்சுகள் தமிழகத்தில் கேட்க ஆரம்பித்திருக்கின்றன.

தமிழகத்தில் ஆட்சியிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் கட்சிகளுடன் தொகுதிப் பங்கீடு தொடர்பான பேச்சுகளில் தீவிரமாக இறங்கியுள்ளது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி தமிழகத்தில் 39 தொகுதிகளில் போட்டியிட்டு, அவற்றில் 38 தொகுதிகளில் வெற்றி பெற்றிருந்தது. தற்போது தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுகள் ஆரம்பமாகியுள்ள நிலையில் தி.மு.க. கூட்டணியில் உள்ள ஒவ்வொரு கட்சியும், கடந்த தேர்தலில் போட்டியிட்டதைவிட இந்த முறை அதிக இடங்களில் போட்டியிட வேண்டும் எனக் கோரிவருகின்றன. தி.மு.க.வின் கூட்டணியில் உள்ள காங்கிரஸ் கட்சி கடந்த முறையை விடவும் அதிக தொகுதிகள் வேண்டும், அல்லது கடந்தமுறை ஒதுக்கப்பட்ட தொகுதிகள் தேவை என்று விடாப்பிடியாக இருப்பதால் தி.மு.க. நெருக்கடியில் உள்ளது என்கின்றன தமிழக அரசியல் தகவல்கள்.

பா.ஜ.க. கூட்டணியிலிருந்து வெளியேறி, தனிக் கூட்டணி அமைக்கும் முயற்சியில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு கணிசமான வெற்றி கிடைத்திருக்கிறது . எதிர் முகாம்களில் பலம் குறைவான கட்சிகளைக் குறிவைத்து வியூகங்களை வகுத்து வருகிறார் எடப்பாடி பழனிச்சாமி. பாரதிய ஜனதாக் கட்சியும் தமிழகத்தில் தனது காலடியைப் பதிப்பதற்கான தீவிர முயற்சிகளை ஆரம்பித்திருக்கின்றது. தமிழ் நாட்டில் உள்ள சிறு சிறு கட்சிகளுடன் பேச்சுகளை முன்னெடுத்திருக்கும் பா.ஜ.க. அந்தக் கட்சிகளைத் தனது கூட்டணிக்குள் இழுப்பதற்கு பகீரதப்பிரயத்தனம் மேற்கொண்டிருக்கின்றது. மத்தியில் ஆட்சியைக் கைப்பற்றுவது என்ற நம்பிக்கையில் பா.ஜ.க. உள்ளது. அதனால் மோடியை நம்பி கூட்டணியில் பல கட்சிகளைச் சேர்க்க வலை வீசப்பட்டு வருகின்றது. சமத்துவ மக்கள் கட்சியை கலைத்து பா.ஜ.க.வுக்குள் சங்கமித்து விட்டார் சரத்குமார். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஓ.பி.எஸ். அணி, பாரதிய ஜனதாக் கட்சியுடன் கூட்டணி அமைக்கத் திட்டமிட்டுள்ளது . பா.ஜ.க.வின் தாமரைச் சின்னத்திலேயே ஓ.பி.எஸ். போட்டியிடவேண்டும் என்ற பா.ஜ.க.வின் நிபந்தனையால், இந்தக் கூட்டணிப் பேச்சுகள் இழுபறியில் உள்ளன என்று கூறப்படுகின்றது. இது தொடர்பாகப் பேச்சு நடத்த ஓ.பன்னீர்செல்வம் குழு ஒன்றை அமைத்திருக்கின்றார். அதேநேரம் பா.ம.க. தலைவர் அன்புமணியும், பா.ஜ.க.வுடன் பேச்சுகளில் ஈடுபட்டுவருகிறார் என்ற தகவலொன்றும் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.' நாம் தமிழர் கட்சி ' கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு 3.9 சதவீத வாக்குகளைப் பெற்றிருந்தது. அந்தக் கட்சி இந்தமுறையும் தனித்தே போட்டியிடும் என்று அறிவித்துள்ளது. கடந்த தேர்தல்களை விடவும் எதிர்வரவுள்ள தேர்தல்களம் வித்தியாசமாக இருக்கும் என்கின்றனர் தமிழக அரசியல் நோக்கர்கள். தி.மு.க. கூட்டணியைத் தவிர ஏனைய கூட்டணிகள் இன்னமும் உறுதியாகவில்லை. மறைமுகப் பேச்சுகள் நடந்துவரும் நிலையில், எதிர்வரும் நாள்களில் கூட்டணி தொடர்பான இறுதித் தகவல்கள் வெளிவரும் என்று எதிர்பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூன்றாம் உலகப்போர் பிரான்ஸிலிருந்து!

ஆர்.பிரகாஷ்


மூன்றாம் உலகப்போரை மனுக்குலம் சந்திக்குமாயின், அந்தப்போர் உக்ரைனை மையமாக வைத்து பிரெஞ்சுத் தேசத்திலிருந்து தோற்றம் பெறுவதற்கான அத்தனை சாத்தியப்பாடுகளும் வலுவாகவே ஏற்பட்டிருக்கின்றன. 'உலகின் ஆளுமைமிக்க இளம் தலைவர்' என்ற பட்டியலில் கனேடியப் பிரதமர் ட்ரூடோ உள்ளிட்டவர்களைப் பின்தள்ளி முன்னிலையில் இருந்துவந்த பிரான்ஸின் அதிபர் இம்மனுவல் மக்ரோன்தான் உலகப்போரொன்றை வலிந்து ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும், உக்ரைன் - ரஷ்ய எல்லைக்கப்பால் இந்தப் போரை விரிவுபடுத்தக்கூடிய அத்தனை ஏதுநிலைகளையும் அண்மைக்காலமாக ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார்.

பிரான்ஸின் தலைநகர் பரிஸில் உச்சிமாநாடொன்று அண்மையில் இடம்பெற்றது. நேட்டோ நாடுகளின் பிரதிநிதிகள் அநேகமானோர் கலந்துகொண்ட இந்த மாநாட்டில் உரையாற்றிய மக்ரோன், 'உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யா தோல்வியடையவேண்டும். ரஷ்யாவின் தோல்விக்காக எந்த எல்லைக்கும் நான் செல்வேன். தேவைப்பட்டால் நேட்டோ நாடுகள் தங்களின் படைகளைக்கூட உக்ரைனுக்கு அனுப்பவேண்டியிருக்கும்' என்று வெளிப்படையாகவே தெரிவித்தார். மக்ரோனின் இந்த அறிவிப்பால் கோபமடைந்த ரஷ்யா, உக்ரைனுக்கு எதிரான போரில் மேம்பட்ட தலைமுறை ஆயுதங்களைப் பயன்படுத்த ஆரம்பித்திருக்கின்றது.

ரஷ்யாவின் தோல்வி தொடர்பான அறிவிப்புடன் நின்றுவிடாது, அதற்குரிய செயற்பாட்டுத் தளத்திலும் மக்ரோன் தற்போது தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கின்றார். நேட்டோ கூட்டணியின் 32ஆவது நாடாக சுவீடன் இணைந்துகொண்டமை, ரஷ்யாவுக்கு எதிரான போருக்காக உலகநாடுகளின் ஆதரவுத்தளத்தை உருவாக்குகின்றமை, ரஷ்யாவுக்கு எதிரான இராணுவக் கூட்டணியை பலப்படுத்துகின்றமை என அனைத்திலும் மக்ரோனின் செல்வாக்கும் நேரடித் தலையீடும் மிகமிக அதிகமாகவே இருக்கின்றன.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலகிய பின்னர், அதனிடமிருந்த தலைமைத்துவத்தை பிரான்ஸ் பெற்றுக்கொண்டது. அன்றுமுதல் அமெரிக்காவுக்கு நிகரான 'மேற்கத்தேய மாற்றுச் சக்தியாகவும்' பிரான்ஸ் தன்னை வரலாற்றில் நிலைநிறுத்தியே வருகின்றது. ரஷ்யாவுக்கு எதிரான போரில், மக்ரோன் காட்டும் தீவிர ஆர்வம்கூட இதன் பிரதிபலிப்பே.

மேற்கத்தேய நாடுகளும், நேட்டோ அரசாங்கத்தினரும் இவ்வாறான நகர்வுகளை மேற்கொண்டால், ரஷ்யா ஒருபோதும் கைகட்டி, வாய்மூடி மௌனியாக இருந்துவிடாது. ஈரான், சீனா, வடகொரியா என இராணுவப் பலமுள்ள பல நாடுகள் ரஷ்யாவுக்கும் துணைநிற்கின்றன. இந்த நாடுகளில் இருந்து ரஷ்யாவுக்குத் தேவையான ஆயுதங்கள் தற்போது செல்லத் தொடங்கியிருக்கின்றன. முதல் கட்டமாக 10 ஆயிரம் கொள்கலன்களில் துப்பாக்கி ரவைகள், குறுந்தூர ஏவுகணைகளை அனுப்பிவைத்துள்ளது வடகொரியா. அத்துடன் ரஷ்யாவால் தற்போது பயன்படுத்தப்படும் ஆளில்லா விமானங்கள் ஈரானின் தயாரிப்பாகவே கருதப்படுகின்றது. ஆக, பிரான்ஸின் அணிச்சேர்க்கைக்கு நிகரான கூட்டணியொன்று ரஷ்யாவாலும் தற்போது திரைமறைவில் கட்டியெழுப்பப்பட்டு வருகின்றது. இந்தக் கூட்டணிகள் 'உலகப்போர் என்ற கறுப்புப் புத்தகத்தை' இலகுவில் அடைந்துகொண்டாலும் அதில் ஆச்சரியமில்லை. அவ்வாறான கறுப்புப் புத்தகம் வரலாற்றில் எழுதப்படுமாக இருந்தால், அதில் பிரான்ஸின் பக்கங்களுக்குப் பஞ்சமிருக்காது. ஆனால், வரலாற்றின் எழுதுகோல் என்னமோ இப்போதுவரை ரஷ்யாவின் கரங்களில்தான் உள்ளது. ■



# சுற்றுலாவும் ஓர் ஆயுதமாகலாம்!

தி.ராஜ்

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விவகாரம் மீண்டும் பேசுபொருளாகியிருக்கின்றது. அந்த ஆலயம் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படும்போது மாத்திரம் அதற்கான போராட்டங்கள், கவனவீர்ப்புகள் நடத்தப்படுவதும் பின்னர் அவை மறக்கப்படுவதும் வாடிக்கையாகியிருக்கின்றன. ஒவ்வொரு தடவையும் நடத்தப்படும் போராட்டத்தின் அழுத்தம் போதாமையாலேயே மீண்டும் பிரச்சினை உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. போராட்டங்கள் பெரும்பாலும் மக்கள் மயப்படுத்தப்படாமல் இருக்கின்றன. அந்த ஆலயத்துடன் நேரடியாகத் தொடர்புடைய மக்களைத் தவிர ஏனையோர் தமக்கு இதனுடன் தொடர்பில்லை என்பதைப்போல இயங்கிக்கொண்டிருக்கின்றனர்.

இது தனியே வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரருக்கான பிரச்சினையன்று. சிங்கள - பௌத்தமயமாக்கலை தமிழர் தேசத்தில் முன்னெடுக்கும் நிகழ்ச்சி நிரலில் ஓர் அங்கம். சிங்கள - பௌத்த மயமாக்கலை சிறிலங்கா அரசாங்கம் தனது பல்வேறு அரச திணைக்களங்கள் ஊடாக நேரடியாகவும் மறைமுகமாகவும் முன்னெடுத்து வருகின்றது. சிறிலங்காவின் ஆட்சிப்பீடத்துக்கு யார் வந்தாலும் அந்த நிகழ்சி நிரல் நிறுத்தப்படப்போவதில்லை. அந்த நிகழ்ச்சி நிரலுக்கு எதிராகப் போராடவேண்டிய நிர்ப்பந்தத்தில் தமிழினம் இருக்கின்றது. இந்த உண்மையை மக்கள் மயப்படுத்தவேண்டும். ஆனால் அதைச் செய்வதற்கு யாரும் முன்வராதது வருத்தத்துக்குரியது. வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்காக இன்று போராடவேண்டும், குருந்தூர்மலைக்காக நாளை போராடவேண்டும். இப்படி ஒவ்வொரு தனித்தனிக் கூறுகளுக்காகவும் போராடுவதால் மக்களும் சலிப்படையும் ஆபத்தான நிலைமையே இருக்கின்றது. சிறிலங்கா அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு எதிராகவே எமது போராட்டம் அமையவேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒரு விடயத்தை கடந்த காலங்களில் குறிப்பிட்டிருந்தார். 'எதிரிக்கு என்ன மொழி புரியுமோ அந்த மொழியிலேயே பதிலளிக்கவேண்டும். புலிகள் ஆயுதம் ஏந்தவேண்டும் என்பதை தீர்மானித்தது எதிரிதான்' என்று அவர் சொல்லியிருந்தார். தற்போதைய சூழலில் இலங்கை அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்காத எந்தவொரு ஜனநாயகப் போராட்டமும் பலனைத்தரப்போவதில்லை. கடந்த காலங்களில் தந்தை செல்வா அஹிம்சைப் போராட்டத்தை முன்னெடுத்தபோது நிர்வாக முடக்கலை செய்தார். வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்திலுள்ள அரசாங்க திணைக்களங்கள் முடக்கப்பட்டன. பொலிஸாரால் அரசியல்தலைவர்கள் கைதாகி சிறையிலும் அடைக்கப்பட்டனர். இன்று அவ்வாறானதொரு போராட்டத்தை முன்னெடுக்கும் திராணியுள்ள அரசியல் தலைவர்கள் எவரும் தாயகத்தில் இல்லை. அரசாங்கத்தை ஆட்டிப்படைக்காத போராட்டங்களால் பலனில்லை என்ற சூழலில்தான் ஜனநாயகப் போராட்டத்தின் வடிவத்தை மாற்றுவது பற்றிச் சிந்திக்கவேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த ஜனவரி மாதம் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். இதன்போது அவர் குறிப்பிட்ட விடயத்தை கவனத்தில்கொள்ளவேண்டும். வடக்கு மாகாணத்தை இந்தியாவுடன் தமிழகத்துடன் மையப்படுத்தி இந்துக்களை கவரும் வகையில் சுற்றுலாத்துறையைமுன்னெடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். வடக்கில் உள்ள புராதன இந்து ஆலயங்களை மையப்படுத்திய சுற்று லாவை ஊக்குவிக்க வேண்டும் என்று கூறியிருந்தார். இலங்கையின் பொருளாதாரம் நெருக்கடிக்குள்ளாகி மீண்டுவருகின்றது.

சுற்றுலாத்துறையே அதன் அடிநாதமாக இருக்கின்றது. எனவே, தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் தேசங்களில் குறிப்பாக இந்தியாவில் தமிழ்நாட்டில் போராட்டங்களை ஆரம்பிக்க வேண்டும். இலங்கைக்கு சுற்றுலாவி களாகச் செல்பவர்களுக்கு இங்கு நடக்கின்ற ஆக்கிரமிப்புகளையும் உரிமைமீறல்களையும் எடுத்துரைக்க வேண்டும்.

இந்தியா-தமிழகத்திலிருந்தான சுற்றுலாவிகள் இந்து சமயத்தை மையப்படுத்தியே இலங்கைக்கு வருகின்றார்கள். அவர்களுக்கு இங்குள்ள புராதன ஆலயங்கள் மீதான பௌத்த - சிங்களத்தின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலை அறிவூட்டவேண்டும்.

தமிழகத்தில் ஈழ ஆதரவு நிலைப்பாட்டுடன் பலர் இயங்குகின்றார்கள். அவர்களின் ஆதரவுடன் இதைச் செய்ய முடியும். இவ்வாறு செய்வதன் ஊடாக உடனடிப் பலன் கிடைக்காவிடினும் நீண்ட கால நோக்கில் இலங்கையில் சுற்றுலாத்துறையில் கணிசமான செல்வாக்கைச் செலுத்தமுடியும்.

கடந்த காலங்களில் இலங்கை அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தடைவிதிப்பதற்காக ஒவ்வொரு நாடுகளிலும் இராஜதந்திர ரீதியில் பெரும் பரப்புரைகளை முன்னெடுத்திருந்தது.

அதைப்போன்றே தமிழர் தரப்பும், இலங்கையின் சுற்றுலாத்துறையை இலக்கு வைத்து பெரும் பரப்புரை போரை முன்னெடுப்பதன் ஊடாக தாக்கத்தைச் செலுத்த முடியும். இலங்கை அரசாங்கத்தை அழுத்தத்துக்கு உள்ளாக்குவதன் மூலமே அவர்களது சிங்கள - பௌத்த நிகழ்ச்சி நிரலின் வேகத்தைத் தணிக்கமுடியும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவராத்திரியில் பொலிஸ் தாண்டவம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞர்கள் ஆலயத்துக்கு அண்மையில் உள்ள ஆற்றுநீரை அள்ளிவந்து மக்களின் தாகத்தினைத் தீர்த்தனர். இதேவேளை நீரின் தேவை மேலும் அதிகரித்தமையால் உழவியந்திரத்தில் நீரினைக் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளை ஆலய நிர்வாகம் முன்னெடுத்தது. இரண்டு கொள்கலன்களில் நீர் ஏற்றப்பட்டு உள்ளேவர முற்பட்டபோது பொலிஸார் அதனையும் தடுத்து நிறுத்தினர். உழவியந்திரம் செல்வதற்கு அனுமதியில்லை எனத்தெரிவிக்கப்பட்டது. குறித்த தகவல் ஆலயத்தில் நின்ற வர்களின் காதுகளுக்கு எட்டியது. ஆத்திரமடைந்த பொதுமக்களில் ஒருபகுதியினர் அந்தப்பகுதிக்குச் சென்றனர். "உள்ளுக்க பொம்பிளையள் குழந்தைகள் எல்லாம் நிக்குதுகள். இந்த தண்ணிய விட்டியள் எண்டால் உங்களுக்கு புண்ணியமாப் போகும் என்று பொலிஸாரிடம் மன்றாட்டமாகக் கேட்டனர்.

"இதுக்குள்ள வாகனம் போக அனுதியில்லை. விட ஏலாது என்று பொலிஸார் திட்டவட்டமாகத் தெரிவித்தனர்.

"உலகத்தில இப்பிடியும் ஒரு பொலிஸ் இருக்குதோ? அநியாயம் பிடிச்சவங்கள்.குடிக்கிற தண்ணியை உள்ளுக்க கொண்டுபோனால் என்ன குறையப்போகுதாம்? ரெண்டில ஒன்று பாப்பம். வாங்கோ.எல்லாரும் றோட்டை மறிப்பம். ஒருக்காத் தானே சாகப் போறம்.. கொதிப்படைந்த பொதுமக்கள் வீதியில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பின்வாங்கிய பொலிஸார் உழவியந்திரத்தினை உள்ளே செல்ல அனுமதித்தனர்.

## கவிழ்ந்தது உழவியந்திரம்

நீரைக் கொண்டுபோன சந்தோசம் அதிகநேரம் நீடிக்கவில்லை. காட்டுப்பாதை என்பதனால் இடைநடுவில் உழவியந்திரம் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. அதில் வைக்கப்பட்டிருந்த ஒரு நீர்த்தாங்கி கீழே விழுந்து நீர்முழுதும் வெளியேறியது.உழவியந்திரத்தில் இருந்த நான்குபேர் தூக்கிவீசப்பட்டனர். இதனால் ஒருவர் படுகாயங்களுக்கு உள்ளானார். அவர் உடனடியாக மீட்கப்பட்டு, மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். அதில் பயணித்த ஏனைய மூவரும் சிறுகாயமடைந்த நிலையில் மிகுதி நீரை ஏற்றிக்கொண்டு ஆலயத்துக்கு வந்துசேர்ந்தனர்.

" தண்ணி வந்திட்டுது ஓடிவாங்கோ.."

மக்கள் மனதில் நிம்மதிப்பெருமூச்சு. முண்டியடித்துக் கொண்டு தண்ணீர்த்தாங்கியை நோக்கி பொதுமக்கள் ஓடிச்சென்று தாகம் தணித்தனர்.

## வெளியேறிய மக்கள்

முதலாவது பூஜை நிறைவடைந்ததும் தூரப்பிரதேசங்களில் இருந்து வருகைதந்த பொதுமக்கள் ஆலயத்தினை விட்டு புறப்படத் தொடங்கினர்.வழிபாடுகள் ஒருபுறம் இருந்தாலும் வழமைக்கு அதிகமான பொலிஸாரின் பிரசன்னம் மக்கள் மத்தியில் அச்ச உணர்வினை ஏற்படுத்தியிருந்தது. இதனாலேயே இரவுப் பூஜைகளில் கலந்துகொள்ளாமல் பெருமளவு பொதுமக்கள் வெளியேறிச் சென்றனர். இந்த நிலைமையே பொலிஸார் பலத்தைப் பிரயோகிப்பதற்கு உதவியது. மாலை 5 மணிக்குப் பின்னர் உள்ளூர்ப் பொதுமக்களில் சிறுபகுதியினர் மாத்திரம் இரவுப் பூஜைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தனர்.

முன்னதாக ஆலயத்தினை விட்டுப் புறப்பட முற்பட்ட வவுனியா ஊடகவியலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் ஆகியோரை பொதுமக்கள் செல்லவேண்டாம் எனத் தடுத்தனர்.

"இவங்கள் இண்டைக்கு எதையோ செய்ய போறாங்கள் நீங்களும் இல்லை எண்டால் எப்படி இதை உலகத்துக்கு கொண்டுபோறது? கொஞ்சநேரம் எங்களுக்காக நில்லுங்கோ" என்று ஆலயநிர்வாகத்தினர் விநயமாக வேண்டினர். இதனால் அவர்களது பயணமும் நிறுத்தப்பட்டது.



வெளியேறுமாறு பொலிஸார் உத்தரவு

"6மணிக்குப் பிறகு ஆலய வளாகத்தில ஆரும் நிக்காதேங்கோ" என்று பொலிஸார் கடுந்தொனியில் அறிவித்தனர்.

"இந்தப் பாழ்பட்டுப்போன பொலிஸுக்கு சிவராத்திரி இரவுதான் எண்ட விசயம் தெரியாது போலகிடக்கு. இனித்தான் பூசை தொடங்கவே போகுது இதுகளை நிப்பாட்டிறதுக்கு நீதிமன்றம் ஒருகட்டளை தந்திருக்கும் தானே. அதைக் காட்டுங்கோ. நாங்கபோறம்" என்று மக்களில் சிலர் பொலிஸாருக்குத் தெரிவித்தனர். ஆனால் அதையெல்லாம் கேட்கும் நிலையில் பொலிஸார் இல்லை.

"கந்தறுந்து போனவங்களே. கடவுளைக் கும்பிடவும் உரிமையில்லையா எங்களுக்கு? ஏன் கலைக்கிறியள்? இதென்னடாப்பா சோதனை? விகாரைக்குப் போய் இப்படிச் செய்வியளோ? " என்று மக்கள் புலம்பத் தொடங்கினார்கள்.

6 மணிக்குப் பின்னர் ஆலயத்தில் நிற்பதற்கு தொல்பொருள்திணைக்களம் அனுமதி மறுத்துள்ளதாக பொலிஸாரால் பொதுமக்களுக்கு மீண்டும்கூறப்பட்டது. இதற்கிடையில் அங்கு வழிபாடுகளில் ஈடுபட்ட பொதுமக்களுடன் தனித்தனியாக கலந்துரையாடிய பொலிஸார், அவர்களை வெளியேறுமாறு தெரிவித்தவண்ணம் இருந்தனர். இந்தமுரண்பாடு நீடித்துச்சென்ற நிலையில் இரவு வழிபாடுகளை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளும் ஒருபுறம் இடம்பெற்றுக்கொண்டிருந்தன.

## கலகத்தடுப்பு பொலிஸார் அழைப்பு

பொலிஸாரின் கோரிக்கை தொடர்ச்சியாகப் புறம்தள்ளப்பட்டமையினால் மாலை 6.30 மணிக்கு கலகத்தடுப்புப் பொலிஸார் அழைக்கப்பட்டனர். அவர்களுடன் விசேட அதிரடிப்படையினரும் வந்திறங்கினர். சொற்ப அளவிலான மக்களே அங்கு இருந்தனர். இதற்கு மத்தியில் இரவுப்பூஜைகளில் கலந்துகொள்வதற்காக ஆலயம் நோக்கி வருகை தந்த பெருமளவான மக்கள் பிரதானவீதியில் வைத்து பொலிஸாரால் திருப்பி அனுப்பப்பட்டனர். மக்கள்மத்தியில் மீண்டும் அச்சநிலை ஏற்பட்டது. "எங்களை பிடிச்சு என்ன செய்வீங்கள் ?சிறையில் அடைப்பீங்கள், அவ்வளவுதானே? இதெல்லாம் நிறையப் பாத்திட்டம். உங்கட கொடுமைகளை எல்லாம் தட்டிக்கேட்கிற காலம் எங்களுக்கும் வரும் அதிகாரம் இருக்கெண்டு ஆடாதையுங்கோ. உங்கட தலைவரை உங்கட மக்களே ஓடஓட அடிச்சுக்கலைச்சதை மறந்திட்டியளோ? என்று பொதுமக்கள் ஆவேசமடைந்தனர்.



## சமையல்பொருட்களும் பறிமுதல்

ஆனால், எதனையும் செவிமடுக்காத பொலிஸார் பொங்கல் பணிகளில் ஈடுபட்ட பகுதிக்குள் அத்துமீறிச்சென்று பானையில் அவிந்துகொண்டிருந்த அரிசி, மரக்கறி என்பவற்றைப் பறிமுதல்செய்தனர். அங்கு வைக்கப்பட்டிருந்த சமையல் பாத்திரங்களையும் பறித்து அனைத்தையும் உழவியந்திரத்தில் ஏற்றினர். அத்துடன் நீர்த்தாங்கியில் இருந்த நீரினையும் திறந்துவிட்ட பொலிஸார் தங்களது உச்சபட்ச அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டனர். சிவராத்திரி நிகழ்வை எப்பாடுபட்டாவது தடுத்துநிறுத்தவேண்டும் என்ற வெறி, பொலிஸாரின் செயற்பாட்டில் அப்பட்டமாகத் தெரிந்தது. சற்றுநேரத்தில் பக்தர்களைச் சுற்றிவளைத்த கலகத்தடுப்புப் பொலிஸார் அனைவரையும் வெளியேறுமாறு கடுமையாக எச்சரித்தனர்.

"இவங்கட அநியாயத்துக்கு அளவில்லாம போச்சுது. நாட்டில குற்றம் செய்தவன் எல்லாம் சொகுசா இருக்கிறாங்கள். கடவுளைக் கும்பிட்டவனை பிடிக்கிறதுக்கு இத்தனைபடைகளா ?இது தமிழன்ர சாபக்கேடுஇருக்கிறவன் இருந்திருந்தா இந்தநிலை வந்திருக்குமோ? எல்லாரும் ஆலயத்துக்க வாங்கோ..கடவுள் கைவிடமாட்டார்..ஓடிவாங்கோ " என்று மக்கள் கூச்சலிட்டனர். வேலன்சுவாமிகளும், நாடாளுமன்ற உறுப்பினரும் பொலிஸாரின் அடாவடிகளுக்கெதிரான தங்களது எதிர்ப்பினை வெளிப்படுத்தியவண்ணம் இருந்தனர். எதுவும் பலனளிக்கவில்லை. மக்களையே மதிக்காதவர்கள் மக்கள் பிரதிநிதியையா மதிப்பார்கள்?

இராணுவத்தினர், நூற்றுக்கணக்கான பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் புடைசூழ போர் முனைபோல காட்சியளித்தது வெடுக்குநாறிமலை.

## நடந்தேறிய அவலம்

ஆலயத்துக்குள் சென்ற மக்கள் 'ஓம் நமச்சிவாய!ஓம் நமச்சிவாய! 'என்ற மந்திரத்தை உச்சரித்தபடி அமர்ந்தனர். இதனால் பொலிஸார் சற்றுப்பின்வாங்கியதுடன். அவர்களது நடவடிக்கையிலும் தளர்வு ஏற்பட்டது. இந்தநிலைமை ஒரு மணிநேரமாக நீடித்தது.

"மந்திரத்தை நிறுத்தாதேங்கோ..சொல்லிக்கொண்டே இருங்கோ..சிவநாசம் செய்தால் குலநாசம் ஆகும்" என்று மக்கள்ஆர்ப்பரித்தனர். அத்துடன் பூஜைக்கான ஏற்பாடுகளும் பூசகரால் மேற்கொள்ளப்பட்டது. இரவு 8 மணியிருக்கும் .

சப்பாத்துக் கால்களுடன் சந்நிதானத்துக்கு பொலிஸார் அத்துமீறி வந்தார்கள்.

"சனங்கள் எல்லாம் பயந்துபோட்டுதுகள். பூசை நடக்கிறநேரம் ஒரு எச்சரிக்கையைக் கூட அவங்கள் தரேல்ல. என்ன மனுசர் இவங்கள்? இதுக்கெல்லாம் நிச்சயம் விலை இருக்கு. ஓடிவந்து பெடியளைச் சுத்தி நிண்டாங்கள்..அவங்களால்எவ்வளவுமுடியுமோ அவ்வளவு பலத்தையும் காட்டிச்சினம். அப்பாவிகளிட்ட வீரத்தை காட்டிறது ஈஸி தானே. இலங்கைப் பொலிசுக்கு அது புதுசும் இல்ல. எங்கட சனமும் சும்மா இல்ல.. அடங்கிப் போகாம ஆர்ப்பரித்துத்தான் நிண்டதுகள். போராடியே பழக்கப்பட்ட இனமாச்சே. நமச்சிவாய! நமச்சிவயா! எண்டு குரல் எழுப்ப பொலிஸ்காரர் ஒவ்வொருத்தரையும் குண்டுக்கட்டா தூக்கிக்கொண்டு போனாங்கள். பெரும் கொடுமையான காட்சிஅது. தமிழனாப் பிறந்ததே நாங்கள் செய்த பாவம்தான் போலக்கிடக்கு.

உதவிக்கு ஆர் இருக்கினம்?.நாதியற்ற இனமாப் போட்டமே. இவங்கள் சட்டத்தைப் பாதுகாக்கிற ஆக்களா? யுத்தகாலத்தில கூட இப்பிடி அநியாயங்களை காணேல்ல நாங்கள். எல்லாம் அவனுக்குத்தான் வெளிச்சம்" என்று வெடுக்குநாறிமலையில் பொலிஸார் நடத்திய வெறியாட்டத்தை இப்போதும் பதைபதைப்புடன் சொல்கின்றனர் உள்ளூர் மக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யார் உத்தரவு வழங்கியது?

இதேவேளை பொலிஸாரின் அனைத்து முயற்சிகளும் பயனற்றுப்போன நிலையில் இரவு 8 மணியளவில் திடீர் உத்தரவு ஒன்று அவர்களுக்கு வந்ததாக அறியமுடிகின்றது. 'ஆலயத்தில் முன்னின்று வேலைசெய்யும் இளைஞர்களை அடையாளம் கண்டு , அவர்கள் மீது பலத்தை பிரயோகித்து கைது செய்யுங்கள்' என அந்த உத்தரவு அமைந்திருந்தது.

கொழும்பில் இருந்தே இந்த உத்தரவு வழங்கப்பட்டிருந்ததாக அறியமுடிகின்றது. அதன்பின்னரே பொலிசார் தைரியமாக அத்துமீறல்களை முன்னெடுத்தனர்.

## அரைநிர்வாணமாக இழுத்துச்சென்ற பொலிஸ்

பொலிஸாரின் பலப்பிரயோகத்தின்மூலம் அன்றையதினம் 8 பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் ஆலயத்தின் பூசாகரும் உள்ளடக்கம். நாடாளுமன்றஉறுப்பினர் கஜேந்திரன், மக்கள் பிரதிநிதி என்ற மதிப்புக்கூட வழங்காமல் குண்டுக்கட்டாக தூக்கிச் செல்லப்பட்டபோது " இவர் நாடாளுமன்றஉறுப்பினர்" என பொலிஸாருக்கு மக்கள் தெரியப்படுத்தினர். இதனையடுத்து தூக்கிச்சென்ற இடத்திலேயே பொலிஸார் அவரைப் போட்டுவிட்டுச் சென்றனர். ஏனையவர்களில் சிலரின் வேட்டிகள் அவிழ்க்கப்பட்டு உள்ளாடையுடன் 3 கிலோமீற்றர்தூரம் நடத்திச்செல்லப்பட்டு பொலிஸ் நிலையம் கொண்டுசெல்லப்பட்டனர். அவர்களைப் பொலிஸார் தாக்கியதனால் சிலரது உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் ஆலயத்தில் மிச்சமாகியிருந்த பெண்கள்,குழந்தைகள் ,ஊடகவியலாளர்கள் அனைவரும் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் இரவு 9 மணியளவில் காட்டுப்பாதையூடாக வெளியேற்றப்பட்டனர்.

## காரணம் இன்றிய கைது

சிவராத்தியன்று இரவு 8 மணியளவில் கைதுசெய்யப்பட்டவர்கள் மறுநாள் மாலை 5 மணியளவிலேயே நீதவானிடம் முன்னிலைப்படுத்தப்பட்டனர். அதுவரை அவர்கள்மீது எவ்வாறான குற்றத்தினைச் சுமத்தலாம் எனப் பொலிஸார் பலதரப்புகளுடன் கலந்துரையாடினர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அதனை மேலும் ஒப்பிப்பதுபோல பொலிஸாரின் விசாரணைகள் நிறைவுபெறாமையினால் பிணை வழங்கமுடியாது என்ற உத்தரவை நீதவானும் வழங்கியிருந்தார். இதேவளை இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் ஊடகப்பிரிவு ஒரு அறிக்கையினை அவசரமாக வெளியிட்டது.

'வெடுக்குநாறியில் நீதிமன்றஉத்தரவு மீறப்பட்டுள்ளது. தற்போது வறட்சியான காலநிலை. எனவே வனப்பிரதேசத்தில் யாகம் செய்வதால் காட்டில் தீ பரவும் அபாயம்உள்ளது. அத்துடன் சட்டத்துக்கு முரணானவகையில் ஒன்றுகூடியுள்ளனர். இவற்றை அடிப்படையாக வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர்' என்று அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருந்தது.

குறித்தநபர்கள் நீதிமன்ற உத்தரவினை மீறியிருந்தால் அந்தக் காரணத்தினை குறிப்பிட்டே அவர்களைக் கைது செய்து நீதிவானிடம் முன்னிலைப்படுத்தியிருக்க முடியும். ஆனால் அது இடம்பெறவில்லை. அப்படிச்செய்திருந்தால் அவர்களுக்கு அன்றையதினமே பிணை வழங்கப்பட்டிருக்கும். கைதுசெய்யப்பட்டவர்களுக்கு பிணை கிடைக்கக் கூடாது என்பதில் அரச திணைக்களங்கள் இறுதிவரை உறுதியாக இருந்தன.

## தொல்பொருளைச் சேதப்படுத்தினராம்

நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட 8 பேரும் எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். ஆலயத்தில் உள்ள தொல்பொருள்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக அவர்கள் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. அவற்றைச் சேதப்படுத்தியதாக தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர்நாயகத்தால் நீதிமன்றுக்கு வழங்கப்பட்ட அறிக்கைக்கு அமைய அவர்களுக்கான பிணை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருந்தது. வெடுக்குநாறிமலையில் தொல்பொருள்கள் என்று சொல்லப்படுவது மலையும் நிலமும் மரமுமே. அங்கு மரங்கள் வெட்டப்படவில்லை. மலைகள் உடைக்கப்படவில்லை,நிலம் தோண்டப்படவில்லை. அப்படியிருக்கையில் அவர்கள் தொல்பொருள்களுக்கு எவ்வாறு சேதத்தினை ஏற்படுத்தியிருக்கமுடியும்? இதேநேரம் இரவு 9 மணிக்குப்பின்னர் ஆலயம் முழுதும் பொலிஸாரின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. மறுநாள் காலை ஆலய வளாகத்துக்குச் சென்ற பொதுமக்களில் சிலர் புதிய இடங்களில் நெருப்பு மூட்டப்பட்டிருப்பதனை அவதானித்தனர். இது ஆலயநிர்வாகத்தினை சிக்கவைக்கும் அதிகார வர்க்கத்தின் சதியே என்று பொதுமக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

### கட்டளைச்சட்டம் பிரிவு '15சி' என்னசொல்கின்றது?

இலங்கையின் தொல்பொருளியல் கட்டளைச்சட்டத்தின் '15சி 'என்ற ஏற்பாட்டின் கீழ் ஒருவர் மீது சாட்டப்படும் குற்றமானது பிணை வழங்குவதை மறுக்கின்றது. இதன்மூலம் தொல்பொருள் என்று அறிவிக்கப்பட்ட பகுதிக்குள் யாரும் நுழைந்து எதனையாவது செய்து கைது செய்யப்பட்டால் அதற்கு நீதிமன்றால் பிணை வழங்கமுடியாது. அத்துடன் பிரிவு 16இன் படி முழுமையான அதிகாரம் துறைசார் அமைச்சருக்கு வழங்கப்படுகின்றது. அதாவது எந்தவித வரலாற்று உறுதிப்பாடுகளும் இல்லாமல் ஒரு கட்டடத்தையோ அல்லது நிலத்தையோ தொல்பொருள் என்று பிரகடனப்படுத்துவதற்கு அந்த அமைச்சருக்கு கட்டுப்பாடில்லாத முழுமையானஅதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக பிரிவு17 மரங்களைக்கூட தொல்லியல் சின்னமாக அறிவிப்பதற்கான அதிகாரங்களை வழங்குகின்றது.

இவற்றினைப் பயன்படுத்தியே குருந்தூர் மலை அபகரிக்கப்பட்டிருந்தது. அது போலவே வடக்கு-கிழக்கில் உள்ள பலபகுதிகள் தொல்பொருள் என்ற வரையறைக்குள் உட்புகுத்தப்பட்டுள்ளன. இந்தநிலையில் இலங்கைச்சட்டத்தினூடான நீதி என்பது தமிழர்களுக்கு எட்டாக்கனியாகவே இருக்கும்..

### பேரினவாத அரச நிகழ்ச்சிநிரல்

வெடுக்குநாறிமலையில் இடம்பெற்றது பொலிஸாரின் அராஜகம் என்பதற்கும் அப்பால் அது பௌத்தபேரினவாத அரசநிகழ்ச்சிநிரல் என்பதை தமிழர்களால் புரிந்து கொள்ளமுடியும் .

பொலிஸார் வெறும் துருப்புசீட்டாகவே பயன்படுத்தப்பட்டனர். வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ்மக்களுக்குச் சொந்தமான காணிகள்,பாரம்பரியப் பிரதேசங்கள் தொடர்ச்சியாக அபகரிக்கப்பட்டுவருகின்றன. அங்கு பெரும்பான்மையினரின் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. புதிய விகாரைகள் தோற்றம் பெற்றுள்ளன.

வவுனியா வடக்கின் கச்சல்சமளங்குளம், சபுமல்கந்தையாகமாற்றப்பட்டு விகாரை அமைக்கப்பட்டுள்ளது. குருந்தூர் மலை மாற்றம் செய்யப்பட்டு குருண்டிவிகாரை எனஅழைக்கப்படுகின்றது.

அதில் வெற்றிகண்ட பேரினவாதசக்திகள் வெடுக்குநாறி மலையினையும் அபகரிப்பதற்கான செயற்பாட்டில் வீச்சுடன் செயலாற்றுகின்றனர். அதற்காக அரசதிணைக்களங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். ஏற்கனவே வெடுக்குநாறிமலையினை 'வட்டமானபர்வதவிகாரை' என்று அவர்கள்அழைக்கின்றனர்.

போர்அழிவுகள், இடம்பெயர்வு என்பனவற்றால் வவுனியா வடக்கின் எல்லைக்கிராமங்கள் மக்களின்றி சோபையிழந்துள்ளன. அவ்வாறு ஆள்களற்ற நிலையே இவ்வாறான ஆக்கிரமிப்புச்செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு காரணமாக அமைகின்றது.

இன விடுதலைக்காகப் போராடி வீழ்த்தப்பட்ட ஓர் இனத்தின் கடைசிக்கதறல்கள் தென்னாடுடைய சிவனுக்கும் அன்று கேட்கவில்லை..யாரொடு நோவது யார்க்கெடுத்துரைப்பது?

■

---

○ கோகுலராகவன்

# ஒலிம்பிக்கில வெல்லுறது எப்பிடி?



பள்ளிகளில் விளையாட்டுப்போட்டிகள் தொடங்கி விட்டன. நல்லஉச்சிவெயில்காலம் தான்.

பள்ளியால் வந்து சாப்பிட்டு விட்டு "எப்பன் சரிவம்?" என்று தலைவாசல் வாங்கில் படுக்கவும் படலை (இரும்புக் கேற் தான்) திறக்கும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். நாகராசா மாமா சைக்கிளை தள்ளிக் கொண்டு வந்து கொண்டிருந்தார். இனிப் படுத்த மாதிரித்தான்.

"வாங்கோ மாமா"

"என்ன படுக்கை? படுக்கமாட்டியே ? காணிக்குப் போகயில்லையே? "

"இல்லை மாமா விளையாட்டுப் போட்டி தொடங்கியிட்டது. மைதானத்தில நிண்டனான். வெயில் சுட்டுப் போட்டுது"

"அப்ப பொடியளுக்கு? "

"இளரத்தம் சுடாது "

"ஆர் சொன்னது?"

"இருங்கோ" என்றேன்.

மாமாவோடு கதைத்து வெல்லமுடியாது. 75 வயதுக்கு மேல். திடகாத்திரம். ஞாபக சக்தி இன்னும் குறையவில்லை . பிரமச்சாரி வாழ்க்கை. தாயுடன் இருந்தார். தாய் காலமாகி விட தனிவாழ்க்கை. இடது சாரிக் கட்சியொன்றில் இயங்கியவர். தோழர் சண்முகநாதன் பற்றி அடிக்கடி பேசுவார்.

என் இருபது வயதுகளில் கார்ல்மாக்ஸ் அவரால்தான் எனக்கு அறிமுகம்.

நல்ல வாசகர். என் வாசிப்பு பழக்கத்தை "நீ நுனிப்புல் மேயிறாய்" எனத் திட்டுவார்.

ஆனால், என் முதலாவது சிறுகதை வெளிவந்த பின் அவர் அவ்வாறு சொல்வதில்லை.

திடீரெனக் கேட்டார்,

"பள்ளிக்கூடங்களில் விளையாட்டுப் போட்டி அவசியமோ?"

"சரிதொடங்கி விட்டார் இண்டைக்கு. நான் என்ன கல்வி அமைச்சரா? முடிவெடுக்க."

இப்படி ஏடாகூடமாக ஏதாவது கேட்டு வைப்பார். என்பாடு திண்டாட்டம் தான்.

"உடல்,உள சமநிலை வரும்" என்றேன்.

"ஒருநாளிலோ"?

"இந்த வருசம் விளையாட்டிப் போட்டி முடிஞ்சால் பிறகு அடுத்த வருசம் தானே மைதானத்துக்குப் போறியள் "

"இல்லை மாமா இப்ப கோச் (பயிற்றுவிப்பாளர்) போட்டிருக்கிறாங்கள். ஒவ்வொரு நாளும் பயிற்சி இருக்கு."

"அப்ப ஏன் இவ்வளவு காசைக்கொட்டி ஒருநாள் மட்டும் விளையாட்டுப்போட்டி வைக்கிறியள்?"

இந்தாள் கிடா எண்டால் முடா எண்டும். முடா எண்டா கிடா எண்டும். தப்பவே முடியாது.

"சரி சொல்லு உலகத்தில் பெரிய விளையாட்டு போட்டி எது."?

கொஞ்சம் யோசித்தேன் .

"ஒலிம்பிக்."

அதை கேம்(game)என்று சொல்லி பழகிவிட்டதல்லவா. அது தான் விடையைக் கண்டுபிடிக்கத் தாமதம்.

ஒலிம்பிக்கை "விளையாட்டுப் போட்டி" என்று முதன் முதலில் சொன்னது இந்தாளாகத்தான் இருக்கும்.




"இலங்கைக்கு இந்த நூற்றாண்டில ஒலிம்பிக்கில எத்தனை பதக்கம் கிடைச்சது?"

" ரண்டு."

"ஆரார்."?

"1948 இல டங்கன் வைற்."

"2000 இல் சுசந்திகா ஜெயசிங்க "

"காணுமோ "?

"இல்லை மாமா"

"நாட்டில பத்தாயிரம் பள்ளிக்கூடம் , அப்ப பத்தாயிரம் விளையாட்டுப் போட்டி நடக்குது."

"சரி அதுக்கென்ன? "

"ஒலிம்பிக்கில ஒவ்வொரு வருசமும் ஒரு பித்தளைப் பதக்கமெண்டாலும் இலங்கை எடுக்க வேணும் கண்டியோ .அதைச் செய்யுங்கோ".

தலைவாசல் வாங்கில அலுப்பில படுத்துக் கிடக்கிற என்னாலே இதைச் செய்ய முடியுமோ?

அல்லது எனக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்.?

சிரித்தேன்.

"சிரிக்காதை. யோசி"

யோசித்து இந்தாளை போல மண்டை குழம்பி, சீனிக்குப் பதிலா உப்பைப் போட்டு தேத்தண்ணி தரவோ? அப்படி ஒருநாள் எனக்குத் தந்தவர்.

என் மனைவி கொடுத்த தேனீரை வாங்கிக் குடிக்கத் தொடங்கினார்.

நான் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

இப்படித்தான் ஒருநாள்

"நீங்களே விண்ணப்பிச்சு நீங்களே விருது பெறுவது சரியோ?" எண்டு கேட்டிருந்தார்.

"அதற்கு பேப்பர்ல வாழ்த்து வேற. " எண்டும் வியாக்கியானம்.

இந்தாளிட்டை மாட்டி முழிக்கிறதை விட காணிக்குப் போகலாம்.

"மாமா நான் காணிக்குப் போகப்போறன் "

"சரி போ, நானும் சமைக்க வேணும். போட்டு வாறன்."

போய்விட்டார். நானும் ஒலிம்பிக்கில பதக்கம் எப்படி எடுக்க வைக்கிறது என்று யோசித்தபடி காணிக்குப் போக கத்தியைத் தீட்டத் தொடங்கினேன்.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நீங்களும்
உங்கள் கைவண்ணங்கள்,
ஆக்கங்களை அனுப்பலாம்.

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555
Sanjeevi@uthayan.com






வி.சர்வகன்
தரம் - 5
இணுவில் சிவகாமி
அறநெறிப்பாடசாலை



அ.நிதுஷனா
தரம் - 8 F
யா/வேம்படி மகளிர் உயர்தர
பாடசாலை



வி.திவ்யன்
தரம் - 5
யா/கரந்தன்
இராமுப்பிள்ளை
வித்தியாலயம்.



பி.சித்திரன்
தரம் - 6
இணுவில் சிவகாமி
அறநெறி பாடசாலை

# மாற்றத்துக்கான மங்கை கிரேட்டா தன்பர்க்



2018 ஓகஸ்ட் மாதம் தொடங்கி வாரம் மூன்று முறை பள்ளி நேரத்துக்குப் பின், ஸ்வீடன் நாட்டு நாடாளுமன்றத்துக்கு வெளியே ஒரு 16 வயதுச்சிறுமி, பள்ளி முடிந்து வீட்டுக்குச் செல்லாமல், தனியாக மாதக்கணக்காகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். அவள் பெயர் கிரேட்டா தன்பர்க்.

முதலில் யாரும் இந்தப் போராட்டத்தைக் கண்டுகொள்ளவில்லை. ஆனால் நாள்கள் ஆக ஆக சிறிது சிறிதாக பலரின் கவனம் அவர் பக்கம் திரும்பியது. அவரிடம் பேசிய ஒவ்வொருவரிடமும் அவர் கூறியது, பருவநிலை மாற்றம் குறித்து உடனடியாக நாம் ஏதாவது செய்யவேண்டும் என்பதே. 'பொருளாதார வளர்ச்சி' என்பதை தாரக மந்திரமாகக் கொண்டு செயற்படும் உலகில், நொடிக்கு நொடி மணிக்கு மணி நாளுக்கு நாள் புவி வெப்பமடைந்து வருகிறது. இதைக் கவனத்திற்கொண்டு தன்பர்க் போராட்டத்தில் ஈடுபட்டார். காலநிலை மாற்றத்தை உணர்ந்து அதைத் தடுக்க நீங்கள் உண்மையாக முயற்சி எடுக்காவிட்டால், நீங்கள் அரக்கர்கள் தான். இளைய தலைமுறை உங்களைக் கவனித்து வருகிறது. எங்களை தோல்வியடையச் செய்ய நினைத்தால், நாங்கள் உங்களை என்றும் மன்னிக்க மாட்டோம் - இவ்வாறு அவர் உலகத் தலைவர்களிடம் கேள்விகளை முன்வைத்தார்.



# மன்னிப்பு சிறந்த பண்பு

மன்னர் ஒருவர் காட்டில் வேட்டையாடி விட்டு நகருக்கு எல்லையிலுள்ள கோயில் மரத்தின் நிழலில் சிறிது நேரம் ஓய்வாக உறங்கிக் கொண்டிருந்தார். திடீரென்று எங்கிருந்தோ ஒரு கல் வந்து மன்னரைக் காயப்படுத்தி, அவர் தூக்கத்தைக் கலைத்தது.

காவலர்கள் நாலா பக்கமும் சென்று, ஒரு பெண்ணைப் பிடித்து, அழைத்து வந்து மன்னர் முன் நிறுத்தினார்கள்.

மன்னர் அந்தப் பெண்மணியை பார்த்து, "ஏனம்மா என் மீது கல்லை எறிந்தாய்? அது என் தூக்கத்தைக் கலைத்ததுடன் என்னையும் காயப்படுத்தி விட்டது" என்றார். வரும் வழியில் மரத்தில் பழங்கள் இருப்பதைப் பார்த்தேன். என் குழந்தைகளின் நினைவு வந்தது. பிள்ளைகளின் பசியை போக்குவதற்கு அந்தப் பழங்களைப் பறிப்பதற்காக ஒரு கல்லை எடுத்து மரத்துக்கு எறிந்தேன். தாங்கள் மர நிழலில் உறங்கிக் கொண்டிருந்தது தூரத்தில் இருந்து எனக்குத் தெரியவில்லை." என்று வேண்டி நின்றாள்.

மன்னர் அந்தப் பெண்மணியை பார்த்து, "பெண்ணே, நீ செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்கின்றாய். அது உன் சிறந்த பண்பு. உன்னை மன்னித்து விட்டேன்", என்று கூறினார்.

**நீதி : செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்பது சிறந்த குணமாகும்**


## விடுகதைகள்

1. இரவும் பகலும் ஓய்வில்லை. படுத்தால் எழுப்ப ஆள் இல்லை அவன் யார்?
2. எட்டாத ராணி இரவில் வருவாள் பகலில் மறைந்து விடுவாள் அவள் யார்?
3. உயிர் இல்லாத நீதிபதி அவர் யார்?
4. உலகமெல்லாம் உறங்காமல் அலைந்து திரிகிறார் அவர் யார்?
5. ஆண்டுக்கு ஆண்டு வரும் வரி அடுத்தடுத்து வரும் வரி அது என்ன?

**விடைகள்**

**1.இதயம் 2. நிலா 3. தராசு 4. காற்று 5. ஜனவரி,பெப்ரவரி**

# மனதுக்குப் புத்துணர்வு



புத்தக வாசிப்பு நம் மனதை எழுச்சிகொள்ளச் செய்யும் தூண்டும். முதுமையில் வரும் அல்சைமர் (Alzheimer) டிமென்ஷியா (Dementia) போன்ற மறதி நோய்களைத் தள்ளிப்போடும். மூளையை எப்போதும் சுறுசுறுப்பாக வைத்திருக்கும் நினைவாற்றல் குறையாமல் பார்த்துக்கொள்ளும். குழப்பமான மனநிலையில் சரியான முடிவெடுக்கும் ஆற்றலைக் கொடுக்கும். அறிவாற்றலைத் தூண்டும், புதிர் விளையாட்டு (Puzzles), சதுரங்க விளையாட்டு போன்றவை தரும் அதே நல்ல பலன்களை புத்தக வாசிப்பும் கொடுக்கும்.

## LION



My name is Lion and I'm the king of the jungle. I sound Roar Roar Roar. I live in the forest. I belong to the cat family of animals.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org